சர்வதேச தந்தையர் தின சிறப்பிதழ்

வியாழக்கிழமை 16 ஜூன் 2022

# தமிழருவி

அருவி: 02 | சாரல்: 22

தமிழின் தலைநிமிர்வு




சர்வதேச தந்தையர் தினம் ஜூன் 19

## அப்பா என்பது வார்த்தையல்ல; வாழ்க்கையே!




## அதுட்டலான அன்பின் சொந்தக்காரர் அவர்...

குருந்தூர் மலை விவகாரம்.... காலிமுகத்திடல் கண்டுகொள்ளாமல் இருக்கும் ஆக்கிரமிப்பு!

பாசத்தை வெளிப்படுத்தும் பாண் பட்டாணி பிரியாணி

## தந்தையர் தினம் வந்தது எப்படி?

## சிறுவர் துஷ்பிரயோகங்களும் முன்னெடுக்கப்பட வேண்டிய பாதுகாப்பு பொறிமுறைகளும்

## மதவாதம் மாற்றியமைக்குமா மக்கள் மனநிலையை?

# நாளை நாடெங்கிலும் உள்ள பாடசாலைகளுக்கு விடுமுறை!

சகல அரச பாடசாலைகள் மற்றும் அரச அனுமதிப்பெற்ற பாடசாலைகளுக்கு நாளை 17ஆம் திகதி விடுமுறை வழங்கப்பட்டுள்ளது என கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

எரிபொருள் தட்டுப்பாடுதான் இதற்கு காரணம் என தெரிவிக்கப் பட்டுள்ளது.

## எரிபொருளுக்காக வரிசையில் காத்திருந்த ஆட்டோ ஓட்டுநர் மயங்கி விழுந்து மரணம்

பாணந்துறை, வெகட பகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றில் எரிபொருள் பெற வரிசையில் காத்திருந்த முச்சக்கர வண்டி சாரதி ஒருவர் நேற்று உயிரிழந்தார்.

உயிரிழந்தவருக்கு 55 வயது எனவும் அவரது மரணம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

நாடு முழுவதும் எரிபொருட்களுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் எரிபொருள் பெற்றுக்கொள்ள நாடு முழுவதும் மக்கள் நாட்கணக்கில் நீண்ட வரிசைகளில் காத்திருக்கும் நிலை ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இந்திய கடனில் கிடைக்கும் கடைசி டீசல் கப்பல் இன்று



இந்திய கடன் சலுகையில் கிடைக்கும் கடைசி டீசல் கப்பல் இன்று இலங்கையை வந்தடையவுள்ளது.

குறித்த கப்பலில் சுமார் 38000 மெற்றிக் டொன் டீசல் கொண்டுவரப்படுவதாக கூறப்படுகிறது. இலங்கையின் டீசல் கேள்விக்கு அமைய சுமார் 8 நாள் பாவனைக்கு குறித்த டீசல் போதுமானதாகும்.

தற்போது டீசல் 12000 மெட்ரிக் டொன்களும் பெற்றோல் 6000 மெற்றிக் டொன்களும் பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் கைவசம் உள்ளது.

இந்த கையிருப்பு ஒரு நாள் பாவனைக்கு போதுமானது என்றாலும் குறித்த கையிருப்பினை சில நாட்களுக்கு பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டது.

தற்போது நாட்டில் உள்ள பெற்றோல் ஷெட்களில் 80 வீதமானவை மூடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## இந்திய உல்லாசப் பயணிகளை கவர்வதற்கு புதிய திட்டம்!

### பிரதமர் அறிவுறுத்தல்



இந்தியாவில் இருந்து வரும் சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில் திட்டத்தைத் தயாரிக்குமாறு அதிகாரிகளை அறிவுறுத்திய பிரதமர் ரணில் விக்ரமசிங்க, பலாலி விமான நிலையத்தின் செயற்பாடுகளை மீள ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு உரிய அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

2022 ஆம ஆண்டில் இலங்கை, சுமார் 800,000 சுற்றுலா பயணிகளை ஈர்க்கும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் இதன் வருமானம் 800 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும் என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சுற்றுலாத்துறையின் பங்குதாரர்களுடன் பிரதமர் அலுவலகத்தில் நேற்று கலந்துரையாடலில் ஈடுபட்டபோதே மேற்குறிப்பிட்ட விடயம் தெரிவிக்கப்பட்டது. 2025 ஆம் ஆண்டளவில் 2.5 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை இலக்காகக் கொண்டு 3.5 பில்லியன் அமெரிக்க டொலர்களை வருமானமாக ஈட்டக்கூடிய மற்றும் சுமார் 1.5 மில்லியன் உயர்மட்ட சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதற்கான நீண்டகாலத் திட்டங்களை வகுக்குமாறு அனைத்து பங்குதாரர்களையும் பிரதமர் கேட்டுக்கொண்டார்.

உலகெங்கிலும் உள்ள அதிகமான எழுத்தாளர்கள் மற்றும் இலக்கிய ஆர்வலர்களை ஈர்க்கும் வகையில் காலி இலக்கிய விழாவை மேம்படுத்துவதற்கான பணிகளை செயற்படுத்துமாறு பிரதமர் அரச சுற்றுலா அதிகாரிகளை வலியுறுத்தினார்.

## மீண்டும் எரிபொருள் எப்போது கிடைக்கும்?

### தற்போது கூற முடியாது என்கிறார் அமைச்சர்



இதுவரை எரிபொருள் நிறுவனங்களுக்கு %35 மில்லியன் அமெரிக்க டொலர் செலுத்தவேண்டியுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

மேலும், இந்தியாவிடமிருந்து 500 மில்லியன் டொலர் பெற்றுக்கொள்வது தொடர்பில் பேச்சுவார்த்தைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவம் அவர் குறிப்பிட்டார்.

அத்தோடு, மீண்டும் நாட்டுக்கு எரிபொருள் கிடைக்கும் திகதி தொடர்பில் தற்போது சரியாக குறிப்பிட முடியாதுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## அவுஸ்திரேலியா செல்ல முயன்ற வட, கிழக்கை சேர்ந்த 64 பேர் திருகோணமலையில் நேற்று கைது





படகு மூலம் சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்கு செல்ல முற்பட்டதாக சந்தேகிக்கப்படும் 64 பேர் திருகோணமலை கடற்பரப்பில் வைத்து கடற்படையினரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் பயணம் செய்ய பயன்படுத்திய இழுவைப் படகும் மீட்கப்பட்டது.

திருகோணமலை கடற்பகுதியில் நேற்று காலை ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த அதிவேக தாக்குதல் படகு ( Fast Attack Craft P 484) சந்தேகத்திற்கிடமான உள்ளூர் மீன்பிடி இழுவை படகு ஒன்றை இடைமறித்து சோதனையட்ட போது, கடல் மார்க்கமாக வெளிநாடுகளுக்குச் சென்ற சட்டவிரோதக் குடியேற்றவாசிகள் என நம்பப்படும் 64 பேர் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 50 ஆண்கள், 11 பெண்கள் மற்றும் 03 சிறுவர்கள் அடங்குகின்றனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் திருகோணமலை, முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள். அவர்கள் திருகோணமலை துறைமுக பொலிஸாரிடம் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக ஒப்படைக்கப்படவுள்ளனர். இதேவேளை, சட்டவிரோதமான மற்றும் ஆபத்தான கடல் பயணங்களில் ஈடுபட வேண்டாம் எனவும் கடத்தல்காரர்களின் வலையில் சிக்காமல் இருக்குமாறும் கடற்படை பொதுமக்களை கோரியுள்ளது.

இவ்வாறான கடல் பயணங்களுக்கு பாழடைந்த மீன்பிடிக் கப்பல்கள் பயன்படுத்தப்படுகின்றன. அவை கடலுக்குச் செல்லக்கூடிய தகுதியுடன் இருப்பதில்லை. இவ்வாறான நிலையில், இந்தக் கப்பல்கள் மூலம் பயணம் செய்ய முற்பட்டால் உயிருக்கு அதிக ஆபத்து ஏற்படும் என கடற்படையினர் பொதுமக்களை எச்சரித்துள்ளனர்.

## போகவந்தலாவையில் பொதுமக்களின் கடிதங்களை பதுக்கிவைத்த உத்தியோகத்தர் சிக்கினார்!

பொகவந்தலாவை உப தபால் நிலையத்தில் பணிபுரிந்து வந்த உத்தியோகஸ்தரை எதிர்வரும் இருபத்தி எட்டாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு அட்டன் நீதிமன்ற நீதவான் உத்தரவு பிறப்பித்துள்ளார் குறித்த சந்தேகநபரை நேற்றைய தினம் ஹட்டன் நீதவான் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பொகவந்தலாவ உப தபால் நிலையத்தில் பணிபுரிந்து வரும் உத்தியோகஸ்தர் கொட்டியாகளை பகுதிக்குத பால் விநியோகஸ்தராக பணிபுரிந்து வந்த இவர் மக்களுக்கான உரிய கடிதங்களை உரியவர்களுக்கு வழங்காமல் தமது வீட்டில் வைத்திருந்த குற்றச்சாட்டில் நேற்று முன்தினம் இந்த உத்தியோகத்தர் கைது செய்யப்பட்டதாக பொகவந்தலாவ பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

குறித்த நபர் தனது வீட்டில் சட்டவிரோதமான புகையிலை தூள்களை விற்பனைக்காக வைத்திருந்ததாக பொலிசாருக்கு கிடைத்த ரகசிய தகவலுக்கு அமைய மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே ஒரு தொகை கடிதங்கள் மீட்கப்பட்ட குற்றச்சாட்டில் குறித்த நபர் கைது செய்யப்பட்டதாகவும் சந்தேகநபர் தொடர்பில் இரவில் வீட்டிலிருந்து போலீசாரால் மீட்கப்பட்ட கடிதங்கள் தொடர்பில் பொகவந்தலாவ உப தபால் நிலைய முகாமையாளருக்கு தகவல் வழங்கியதை அடுத்து குறித்த உத்தியோகத்தராக தபால் திணைக்களம் ஊடாக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# குறைந்தது இன்னும் 3 வருடங்களுக்கு நாட்டில் மின்வெட்டு தொடரும்

குறைந்தது இன்னும் மூன்று வருடங்களுக்கு நாட்டில் மின்வெட்டு தொடரும் என இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

நேற்றைய தினம் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அந்த சங்கத்தின் தலைவர் அனில் ரஞ்சித் இதனை தெரிவித்துள்ளார்.

தற்போதைய தேவை ஒரு நாளைக்கு சுமார் 2,800 மெகாவாட் (MW) ஆகும். எனினும், தற்போதுள்ள மின் உற்பத்தி நிலையங்கள் நாட்டின் மின்சாரத் தேவைக்கு போதுமான அளவு உற்பத்தி செய்யவில்லை.

அனல் மின், காற்றாலை மின், சூரிய மின் கலங்கள் மூலம் மின் விநியோகத்தை அதிகரிக்கும் வரை, மின்வெட்டு தொடரும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அந்நியச் செலாவணி நெருக்கடியால் ஏற்பட்ட எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக பெப்ரவரி 22ம் திகதி முதல் இலங்கையில்



நாளாந்த மின்வெட்டு தொடர்வதாக ரஞ்சித் தெரிவித்தார். மாதமொன்றுக்கு சுமார் 100 மில்லியன் டொலர் செலவு நிலைமையை எளிதாக்க அவசர முயற்சியாக அரசாங்கம் அதன் சூரிய மின்கலங்கள் திட்டத்தை விரைவுபடுத்த வேண்டும் என்று அவர் கூறினார்.

மின் வெட்டு தொடர்பில் வெளியாகிய அதிர்ச்சித் தகவல்! மோசமடையும் இலங்கையின் நிலைமை எவ்வாறாயினும், சூரிய சக்தியை சேமித்து வைப்பதற்கு போதுமான மின்கல வங்கிகளை இலங்கையில் நிறுவ வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

தற்போது, இலங்கை தனது பெரும்பாலான மின்சாரத்தை நீர் மின்சாரத்தில் இருந்து உற்பத்தி செய்கிறது, ஆனால் மழை இல்லாத நாட்களில் அது சாத்தியமில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனிடையே, அனல் மின் நிலையங்களுக்கான டீசலை இறக்குமதி செய்வதற்கு இலங்கை மாதமொன்றுக்கு சுமார் 100 மில்லியன் டொலர்களை செலவிடுகிறது.

எனவே, நாடு உடனடியாக புதுப்பிக்கத் தக்கவைகளுக்கு மாற வேண்டும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.




**செய்தி:-**

இலங்கையின் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்திக்கு இந்தியாவால் வழங்கப்பட்ட 400 மில்லியன் டொலர் கடனில் ஒரு சதம்கூட பயன்படுத்தப்படாதது தற்போது தெரியவந்துள்ளது.

**உதய கம்மன்பில கருத்து**

ஒருவேளை உள்வீட்டு அபிவிருத்திக்கு பாவிக்கப்பட்டிருக்குமோ?



## வரிசையில் மலர்ந்த நட்பு தண்ணீராய் ஓடியது

எரிபொருள் வரிசையில் காத்திருந்த இருவரை ஏமாற்றி, டீசல் என தெரிவித்து, 60 லீற்றர் தண்ணீரை 3 கேன்களில் விற்ற சம்பவம் ஒன்று பண்டாரகம பகுதியில் பதிவாகியுள்ளது.

குறித்த 60 லீற்றர் நீர், 24,000 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்துக்கு முகம் கொடுத்தவர் சிறிய லொறியொன்றில் இளநீர் விற்கும் ஒருவர் என்றும் மற்றையவர் சிறிய லொறியொன்றின் சாரதி என்றும் தெரியவந்துள்ளது.

பண்டாரகமயிலிலுள்ள எரிபொருள் நிரப்பும் நிலையத்துக்கு அருகில் குறித்த இருவரும் 5 நாள்களாக காத்திருந்த போது அருகில் இருந்த மற்றொரு நபருடன் நட்பு ஏற்பட்டுள்ளது.

பிரிதொரு இடத்தில் திருட்டு தனமாக எரிபொருள் விற்பனை செய்யப்படுவதாகவும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் புதிதாக அறிமுகமான நபர் குறித்த இருவரிடமும் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து அந்த நபர் தெரிவித்த விடயங்களை நம்பிய இருவரும் 24,000 ரூபாய்க்கு 3 கேன்களில் டீசல் என நினைத்து தண்ணீரை கொள்வனவு செய்து, தமது வாகனங்களுக்கு ஊற்றிய போது, அது தண்ணீர் என தெரியவந்துள்ளது.

## சிறையில் ரஞ்சனை சந்தித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

### விசேட செய்தியையும் கொண்டு வந்தார்!



சுதந்திர தினம், வெசாக் தினம், பொசன் தினம் போன்ற தினங்களில் ரஞ்சன் ராமநாயக்க விடுதலை செய்யப்படுவார் என அரசாங்க தரப்பு கூறிய போதிலும் கூட அது முழுக்க முழுக்க பொய் மற்றும் ஏமாற்று வேலை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

தனது உயர்கல்வியின் பூர்த்தியுடன் நாட்டுக்கு வினைத்திறனுடனும் அர்த்தமுள்ள வகையிலும் சேவையாற்றுவதற்கு ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து செயற்படுவேன் என்ற செய்தியை நாட்டுக்கு தெரியப்படுத்துமாறு ரஞ்சன் ராமநாயக்க எதிர்க்கட்சித் தலைவரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

வெலிக்கடை சிறைச்சாலைக்கு நேற்று காலை சென்று ரஞ்சன் ராமநாயக்கவைச் பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"நாட்டில் நிலவும் கடுமையான நெருக்கடி பற்றி வாராவாரம் ஒவ்வொரு கதை கூறுவதைத் தவிர நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான திட்டவட்டமான செயற்திட்டம் அரசாங்கத்திடம் இல்லை என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், எவ்வாறாயினும், அரசாங்கத்தை பொறுப்பேற்ற போது, 24 மணித்தியாலங்களில் பிரச்சினைகளை தீர்த்து வைப்பதாக தெரிவித்திருந்ததாகவும் சுட்டிக்காட்டினார்.

மக்கள் விவரண ரீதியான விளக்கங்களை எதிர்பார்க்கவில்லை என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் பிரச்சினைகளைத் தீர்த்து நாட்டைக் கட்டியெழுப்பும் செயற்பாட்டையே மக்கள் விரும்புகின்றனர்" எனவும் தெரிவித்தார்.

## சம்மாந்துறையில் கொள்ளையர்கள் 24 மணிநேரத்தில் கைது!

வீடொன்றில் இருந்த பல இலட்சம் பெறுமதியான மின் உபகரணங்கள் மற்றும் பொருட்களை கொள்ளையிட்ட மூவரை 24 மணிநேரத்தினுள் சம்மாந்துறை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புற நகர் பகுதி வீடொன்றில் கடந்த 08 ஆம் திகதி உபகரணங்கள் பல களவாடப்பட்டுள்ளதுடன் வீட்டின் உரிமையாளர் தனிப்பட்ட தேவை நிமித்தம் கொழும்பிற்கு சென்றிருந்த நிலையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக குறிப்பிட்டு கடந்த 15.06.2022 புதன்கிழமை அன்று சம்மாந்துறை பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார்.

இதற்கமைய உரிமையாளர் வழங்கிய தகவலுக்கமைய பொலிஸாருடன் பொதுமக்கள் இணைந்து மேற்குறித்த சந்தேக நபர்கள் களவாடப்பட்ட பொருட்களுடன் கைது செய்யப்பட்டனர். இந்நடவடிக்கையின் போது சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி.எச். ஜயலத்தின் வழிகாட்டலுக்கமைய சம்மாந்துறை பொலிஸ் நிலைய குற்றப்புலனாய்வு பிரிவின் பதில் பொறுப்பதிகாரி ஜனோசன் தலைமையில் சென்ற பொலிஸ் சார்ஜன்ட் குமாரசிங்க (25955) பொலிஸ் உத்தியோகத்தர் பரீட் (%6361) உள்ளிட்ட குழுவினர் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையினால் இன்று (16) சந்தேக நபர்கள் மூவரும் கைதாகினர்.

இவ்வாறு கைதான சந்தேக நபர்களில் 28 வயதானவர் பிரதான சந்தேக நபர் எனவும் ஏனைய இரு சந்தேக நபர்கள் களவாடப்பட்ட பொருட்களை கொள்வனவு செய்தவர்கள் எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

மேலும் கைதான மூன்று சந்தேக நபர்களையும் இன்றைய தினம் (16) சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்காக நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

அத்துடன் நாட்டில் ஏற்பட்டுள்ள தற்போது பொருளாதார நெருக்கடியை தொடர்ந்து சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பல பகுதிகளில் திருட்டு சம்பவங்கள் பல அதிகரித்துள்ளதாகவும் எனவே பொதுமக்கள் விழிப்புணர்வுடன் இருக்குமாறும் அவ்வாறு திருட்டு சம்பவங்கள் இடம்பெற்றிருப்பின் பொலிஸாருக்கு அறிவிக்குமாறும் சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி குறிப்பிட்டார்.

## தென்மராட்சி கல்வி வலய ஆசிரியர்களுக்கான திறன் பலகை பயன்பாடு தொடர்பான பயிற்சி






அனைத்துலக மருத்துவ நல அமைப்பு-IMHO USA மற்றும் இரட்ணம் பவுண்டேசன் ( RATNAM FOUNDATION ) அமைப்பினரது நிதி அனுசரணையில் தென்மராட்சி கல்வி வலயத்தில் இயங்கும் 10 பாடசாலைகளைச் சேர்ந்த 45 ஆரம்ப மற்றும் இடைநிலை ஆசிரியர்களுக்கான திறன் பலகை பயன்பாடு தொடர்பான பயிற்சிநெறி யூன் மாதம் 11,12 ஆம் திகதிகளில் முதல் கட்டமாக தென்மராட்சி வலய கணனி வள நிலையத்தில் நடைபெற்றது. இப்பயிற்சி நெறி இசுருபாய கல்வி அமைச்சின் ஈ- தக்சலாவ மற்றும் வடமராட்சி வலய கணனி வள நிலைய வளவாளர்களினால் நடாத்தப்பட்டது. இப்பயிற்சியின் இரண்டாம் நாளில் குறித்த அதிபர்களுடன் திறன் பலகை பாவனை பற்றியும் வலய கல்வி அலுவலக மேற்பார்வை நடைமுறைகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டு ஆசிரியர்களுக்கான விரலிகளும் பெயர் பலகைகளும் வழங்கப்பட்டன.

இதில் வலயக் கல்வி பணிப்பாளர் திரு.கிருபாகரன் அவர்களும் கலந்து கருத்துக்களை வழங்கியிருந்தார்.

இப்பயிற்சி அனைத்துலக மருத்துவ நல அமைப்பின்-IMHO USA இலங்கைக்கான வதிவிடப்பணிப்பாளர் திரு. கிருஷ்ணகுமார் அவர்களால் நெறிப்படுத்தப்பட்டது. இப்பயிற்சி நெறியின் இரண்டாம் கட்டம் ஆசிரியர்களுகளினது வேண்டுகோளுக்கமைய மூன்று வாரங்களில் நடைபெறவுள்ளது.

தென்மராட்சி கல்வி வலயத்திற்கு வழங்கப்பட 10 பாடசாலைகளுக்கான திறன் பலகை கொள்வனவுக்கான நிதியில் 50% அனைத்துலக தென்மராட்சி அமைப்பினரால் வழங்கப்பட்டிருந்தது .

# தமிழ் ஓலை

மின்னஞ்சல்: aruvitamil812@gmail.com
வாட்ஸ் ஆப் இலக்கம்: 0094 768 320 733


## கத்தியின்றி இரத்தமின்றி யுத்தம் ஒன்று வருகுது!

**நாடெங்கிலும்** உணவுப்பஞ்சம் ஏற்படுவதற்கான எதிர்வுகூறல்கள் எழுந்து வரும் நிலையில் அரசகாணிகளை பயிர்ச்செய்கைக்காக பகிர்ந்தளிக்குமாறு ஜனாதிபதி உத்தரவிட்டிருக்கிறார். முப்படைகள், சிவில் பாதுகாப்பு படைகள் சிறைச்சாலைகள் திணைக்களம் ஆகியவையும் இந்த விவசாயப்போரில் ஈடுபடுத்தப்பட இருக்கின்றன.

இந்த நிகழ்வுகள்?70களில் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா காலத்தில் முடுக்கிவிடப்பட்ட விவசாயப்புரட்சியை ஞாபகப்படுத்துகின்றன1972 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட. பொருளாதார சீர்திருத்தத்துக்காக எரிபொருள், மருந்து தவிர ஏனய பொருட்களுக்கான இறக்குமதி நிறுத்தப்பட்டு தன்னிறைவு பொருளாதாரத்தை நோக்கி நாட்டினை நகர்த்தும் வகையில் விளைச்சல் அதிகரிக்கப்பட்டதுடன் ஏற்றுமதி பொருளாதாரத்துக்கு நாடுதயாரானது.

அரசியல் ஸ்திரமற்ற நிலையில் தற்போது பிரகடனப்படுத்தப்பட்டுள்ள விவசாய போரானது எந்த அளவுக்கு வெற்றியளிக்கும் என்பது கேள்விக்குறியே. உரத் தட்டுப்பாடு,எரிபொருள்தட்டுப்பாட்டிற்கு மத்தியில் பயிர்ச்செய்கை எந்த அளவுக்கு வெற்றியளிக்கும்?அரச ஊழியர்களின் கடமைகள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் காணிகளை பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகள் எந்த அளவு சாத்தியமானது? எதுசாத்தியமோ இல்லையோ 21திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுவதை தடுப்பதற்காவும் அதிகாரத்தை தக்கவைத்துக்கொள்ளவும் ஆளுந்தரப்பு முழுப்பலத்தையும் பிரயோகிக்க ஆரம்பித்துள்ளது.

**அதிகாரத்தை தக்கவைக்க கத்தியின்றி இரத்தமின்றி யுத்தம் ஒன்று வருகுது.**



### குருந்தூர் மலை விவகாரம்....

# காலிமுகத்திடல் கண்டுகோள்ளாமல் இருக்கும் ஆக்கிரமிப்பு!

பவித்திரா



**முல்லைத்தீவு** மாவட்டத்திலுள்ள குருந்தூர்மலை விவகாரம் மீண்டும் சர்ச்சைக்குள்ளாகியிருக்கின்றது. இந்த மலையில் உள்ள ‘குருந்தாவசோக’ ராஜமகா விகாரையில் புத்தர் சிலை மற்றும் புனித பொருட்கள் பிரதிஸ்டை செய்வதற்காக கடந்த ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட்ட முயற்சி தமிழர் தரப்பால் முறியடிக்கப்பட்டிருக்கின்றது. நீதின்ற உத்தரவையும் மீறி இங்கு விகாரை ஒன்று அரசாங்கத்தின் ஆதரவுடன், இராணுவப் பாதுகாப்புடன் அமைக்கப்பட்டுள்ள நிலையில், அதன் அடுத்த கட்டமாகத்தான் இங்கு புத்தர் சிலையை பிரதிஸ்டை செய்வதற்கான முயற்சி முன்னெடுக்கப்பட்டது.

நாடு பாரிய பொருளாதார – அரசியல் நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் நிலையில் தொல்பொருள் திணைக்களத்தின் அனுசரணையுடன் – பௌத்த மகாசங்கத்தின் ஆதரவுடன் – இராணுவப் பாதுகாப்புடன் இதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இந்த நிகழ்வில் பங்கேற்குமாறு ராஜமகா விகாரையின் விகாராதிபதி கல்கமுவே சந்தபோதி தேரர் பகிரங்கமாக அழைப்பு விடுத்திருந்தார் என்பதும் கவனிக்கத்தக்கது.

புதிய கட்டுமானப்பணிகள் எதுவும் இப்பகுதியில் இடம்பெறக்கூடாது என நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கும் நிலையில் அதனையிட்டு எந்தவிதத்திலும் அக்கறை செலுத்தாமல் இவ்வாறு பகிரங்கமாக அழைப்பு விடுக்கும் நிலையில் விகாராதிபதி இருந்துள்ளார். ஆனால், சட்டத்தையும் அமைதியையும் பாதுகாப்பதற்குப் பொறுப்பாக இருக்க வேண்டிய பொலிஸாரோ அவர்களுடைய இந்த சட்டவிரோத செயற்பாட்டுக்குத்தான் பாதுகாப்பு கொடுத்தார்கள். தமிழர்கள் அப்பகுதிக்குச் செல்வதைத் தடுத்தார்கள்.

குருந்தூர் மலையின் உச்சியில் ஆதிசிவன் கோவில் ஒன்று உள்ளது. இங்கு காலங்காலமாக முன்னெடுக்கப்பட்டுவந்த பொங்கல் உள்ளிட்ட பூசை வழிபாடுகள் நிறுத்தப்பட்டுள்ளன. இங்கிருந்த சூலம் பிடுங்கி எறியப்பட்டுள்ளது. சூலம் இருந்த பகுதியில்தான் பௌத்த விகாரைக்கான கட்டுமானப்பணிகள் இடம்பெற்றன. அதன் அடுத்த கட்டமாகத்தான் புத்தர் சிலையை பிரதிஸ்டை செய்வதற்கான முயற்சிகள் ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட்டன.

2018 இல் இங்கு உருவான சர்ச்சையையடுத்து குருந்தூர் மலைப்பகுதி தொல்பொருள் ஆய்வுப் பகுதியாகப் பிரகடனம் செய்யப்பட்டது. தொல்பொருள் ஆய்வுப் பகுதியாகப் பிரகடனம் செய்யப்படும் ஒரு பகுதியில் புதிய கட்டுமானங்கள் எதுவும் செய்யப்படக்கூடாது என்பது பொதுவான விதி. அதற்கு மேலாக நிதிமன்றத் தீர்ப்பு ஒன்றும் இதனைத்தான் வலியுறுத்தியிருந்தது. இருந்தபோதிலும் தொல்பொருள் ஆய்வுப் பகுதி என்ற பெயரில் இந்தப் பகுதி வெளியாட்கள் யாரும் செல்ல முடியாமல் தடுக்கப்பட்டது. இதற்காக இராணுவப் பாதுகாப்பு போடப்பட்டது. இதற்கு மத்தியில்தான் அங்கு விகாரை அமைக்கும் பணி இடம்பெற்றிருந்தது.

> **குருந்தூர் மலையின் உச்சியில் ஆதிசிவன் கோவில் ஒன்று உள்ளது. இங்கு காலங்காலமாக முன்னெடுக்கப்பட்டுவந்த பொங்கல் உள்ளிட்ட பூசை வழிபாடுகள் நிறுத்தப்பட்டுள்ளன. இங்கிருந்த சூலம் பிடுங்கி எறியப்பட்டுள்ளது. சூலம் இருந்த பகுதியில்தான் பௌத்த விகாரைக்கான கட்டுமானப்பணிகள் இடம்பெற்றன. அதன் அடுத்த கட்டமாகத்தான் புத்தர் சிலையை பிரதிஸ்டை செய்வதற்கான முயற்சிகள் ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட்டன.**

இந்தப்பகுதி தடைசெய்யப்பட்ட பகுதியாக மாற்றப்பட்ட பின்னர் இடம்பெற்ற தொல்பொருள் ஆய்வுகளின் போது பௌத்த சின்னங்கள் சில கண்டெடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. அரைகுறையாக சிதைவடந்த நிலையில் பௌத்த விகாரை ஒன்றும் அங்கு காணப்பட்டதாக தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் தகவல் வெளியிட்டார்கள். அதன் அடிப்படையில்தான் பின்னர் புதிதாக பௌத்த விகாரையை அமைக்கும் பணி முன்னெடுக்கப்பட்டது. படையினரின் பங்கேற்புடன்தான் இந்தப் பணி முன்னெடுக்கப்பட்டது.

அரசாங்கம் பாரிய பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கித் தவிக்கின்றது. எரிபொருட்களுக்காக மக்கள் தினமும் வீதிகளில் போராடுகின்றார்கள். உணவுப்பொருட்களின் விலைகள் எட்டமுடியாத உயரத்துக்குச் சென்றுவிட்டதால் நாட்டில் 80 வீதமான மக்கள் ஒரு நேர உணவைத் தவிர்த்துக் கொண்டிருப்பதாக ஒரு தகவல் உள்ளது. இதற்கு மத்தியில் இந்தக் கட்டுமாணத்துக்குப் பாரியளவு நிதி ஒதுக்கப்பட்டிருக்கின்றது. கொழும்பிலிருந்து பெருந்தொகையான பிக்குகளும் சிங்கள மக்களும் இந்தப் பகுதிக்குச் சென்றுவருவதற்கு போக்குவரத்து ஏற்பாடுகள் செய்துகொடுக்கப்பட்டுள்ளன.

பௌத்த விவகார அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட நிதி இதற்காக முழுமையாகப் பயன்படுத்தப்படுகின்றது. இந்த விடயத்தில் பௌத்த விவகார அமைச்சு, இராணுவம், தொல்பொருள் திணைக்களம் என்பன தெளிவான ஒரு நிகழ்சித் திட்டத்தில் இணைந்துசெயற்படுகின்றன. நீதிமன்றக் கட்டளையையிட்டோ, தொல்பொருள் திணைக்களத்தின் பொதுவான விதிமுறைகளையிட்டோ அவர்கள் கவலைப்படுவதில்லை.

மிகுதி 15 ஆம் பக்கத்தில்...

# குரங்கு அம்மை நோய் பரவல்; சுகாதார அமைப்பு ஆலோசனை



குரங்கு அம்மை நோய் தொற்று பரவல் தொடர்பாக அவசரக் கூட்டத்தை நடத்தவுள்ளதாக உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது.

உலகம் முழுவதும் கொரோனா நோய் தொற்று பரவி மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தியது. தற்போது கொரோனா தொற்று கட்டுக்குள் வந்துள்ள நிலையில் குரங்கு அம்மை என்னும் நோய் உலக நாடுகளில் பரவலாக பரவி வருகிறது.

ஆப்பிரிக்கா நாட்டில் முதன் முறையாக இந்த நோய் கண்டுபிடிக்கப்பட்டது. இதுவரை 39 நாடுகளில் குரங்கு அம்மை நோய் பரவியுள்ளதாகவும், இதுவரை உலக நாடுகளில் 1600 குரங்கு அம்மை நோய் தொற்று பாதிப்பு உறுதிபடுத்தப்பட்டு உள்ளதாகவும், %2 பேர் இதுவரை குரங்கு அம்மை நோய்க்கு உலகம் முழுவதும் பலியாகி இருப்பதாகவும் உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

World Health Organization

இந்நிலையில், குரங்கு அம்மை நோய் தொற்று பரவல் தொடர்பாக ஜூன் 23 அன்று அவசரக் கூட்டத்தை நடத்தவுள்ளதாக உலக சுகாதார அமைப்பு அறிவித்துள்ளது. குரங்கு அம்மை நோய் தொற்றானது, சர்வதேச அளவில், கொரோனா போன்று பொதுசுகாதார அவசரநிலை பிரகடனப்படுத்தப்பட வேண்டுமா என்பதை ஆராய்ந்து முடிவெடுக்க இந்த ஆலோசனை கூட்டம் நடைபெற உள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதானோம், குரங்கு அம்மை நோய் பரவுவது அசாதாரணமானது மற்றும் கவலைக்குரியதாக உள்ளது. இதன் பாதிப்பு உலக அளவில் பொது சுகாதார அவரச நிலையை பிரதிபலிக்கிறதா என்பதை மதிப்பிடுவதற்கு சர்வதேச சுகாதார விதிமுறைகளின் கீழ் அவசர ஆலோசனை கூட்டத்தை கூட்ட முடிவு செய்துள்ளேன் என்று தெரிவித்தார்.

# நோய்வாய்ப்பட்ட ஜேர்மன் சிறுவனுக்கு பதிலாக பள்ளிக்கு சென்று பாடம் படிக்கும் ரோபோ





கொரோனா பரவல் அதிகரிப்பால் எதிர்காலத்தில் இது போன்ற மாற்றங்கள் நிகழும் என்று பெர்லின் நகரகல்வி அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஜெர்மன் தலைநகர் பெர்லின் மாநகரில் அமைந்துள்ளது புஸ்டெப்ளூம் - கிரண்ட்சூல் தனியார்பள்ளி. இதில் படிக்கும் % வயது மாணவன் ஜோசுவா மார்டினாஞ்செலி, நுரையீரல் பாதிப்பு நோயால் அவதிப்பட்டு வருகிறான். இதனால் அவனால் தினமும் பள்ளிக்கு செல்ல முடியவில்லை என்று ஜோசுவா தாயார் சிமோன் மார்டினாஞ்செலி வருத்தம் தெரிவித்துள்ளார்.

இதனை அறிந்த மர்ஷான் ஹெல்லர் மாவட்ட நிர்வாகம் சிறப்பு ஏற்பாடு ஒன்றை செய்துள்ளது. அதன்படி செயற்கை நுண்ணறிவுடன்கூடிய ரோபோ ஒன்று வாங்கப்பட்டு, மாணவன் ஜோசுவாவுக்கு பதிலாக பள்ளிக்கு சென்று பாடம் படிக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

**மாணவன் ஜோசுவா**

இப்போது மாணவன் ஜோசுவா அந்த ரோபோ மூலம் பள்ளி ஆசிரியர் மற்றும் தமது வகுப்பு தோழர்களை தொடர்பு கொள்ள முடிகிறது. ஜோசுவா அனுப்பும் தகவல்களை அந்த ரோபோ பிரதிபலிக்கிறது. பாடவேளை இல்லாத சில சமயங்களில் ரோபோ மூலம் ஜோசுவா தமது தோழர்களுடன் அரட்டை அடிக்க முடிகிறது என பள்ளி தலைமை ஆசிரியர் வின்டர்பெர்க் தெரிவித்துள்ளார்.

கொரோனா தொற்று பரவல் காரணமாக பள்ளிக்கு வர முடியாத குழந்தைகளுக்காக ரோபோக்களை பயன்படுத்தும் திட்டத்தை செயல்படுத்தி உள்ளதாக மாவட்ட கல்வி அதிகாரி டார்ஸ்டன் குஹ்னே தெரிவித்துள்ளார்.

பெர்லின் பள்ளிகளுக்காக நான்கு ரோபோக்கள் வாங்கப்பட்டுள்ளதாகவும், தொற்று பரவல் காலத்திற்கு மட்டுமின்றி எதிர்காலத்திலும் இது போன்ற மாற்றங்களுக்கு இது பயன்படும் என்றும் அவர் கருத்து தெரிவித்துள்ளார்.

ரோபோ பள்ளிக்கு வந்து படித்தாலும் தமது தோழர் ஜோஷ்வா உண்மையில் பள்ளிக்கு வர முடிந்தால் அதைதான் நான் விரும்புகிறேன் என்று அவரது வகுப்புத் தோழர் பெரிடன் குறிப்பிட்டுள்ளார்.

# உங்கள் கணவரை கோலை செய்வது எப்படி?

## கட்டுரையை எழுதிய எழுத்தாளருக்கு கணவரை கொன்ற வழக்கில் ஆயுள் தண்டனை

‘உங்கள் கணவரை கொலை செய்வது எப்படி?’ (how to murder your husband) என்ற கட்டுரையை எழுதிய நாவலாசிரியான நான்சி என்பவருக்கு, கணவரை கொன்ற வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.



அமெரிக்காவைச் சேர்ந்த நாவலாசிரியர் நான்சி கிராம்ப்டனின் கணவர் டேனியல் புரோபி சமையல் கலை நிபுணராகவும், ஆசிரியராகவும் பணியாற்றி வந்தார். இந்த நிலையில் நான்சியும், டேனியல் புரோபியும் நிதி நெருக்கடியில் தவித்து வந்துள்ளனர். கடன் பிரச்சினையிலும் சிக்கினர். இந்த நிலையில் கணவர் டேனியல் புரோபி பெயரில் இருந்த காப்புறுதி பணத்திற்காக, அவரை நான்சி 2018-ஆம் ஆண்டு சுட்டுக் கொன்றார். இது தொடர்பாக நடந்த விசாரணையிதான் ஒரேகான் மாகாண நீதிமன்றம், நான்சிக்கு ஆயுள் தண்டனை வழங்கியுள்ளது. விசாரணையில் என் நாவல் ஆராய்ச்சிக்காகவே துப்பாக்கியை வாங்கினேன் என நான்சி தெரிவித்தார். மேலும் நான் எந்த திட்டமும் இல்லாமல்தான் ‘உங்கள் கணவரை கொலை செய்வது எப்படி?’ என்ற கட்டுரையை எழுதினேன். அதில் எந்த நோக்கமும் இல்லை. நீங்கள் நினைப்பதுபோல் எனது கணவரை கொல்வதற்காக அந்தக் கட்டுரையை நான் எழுதவில்லை என்று கூறினார்.

தனது கணவரை கொல்வதற்கு 7 வருடங்களுக்கு முன்னர்தான் ‘உங்கள் கணவரை கொலை செய்வது எப்படி?’ என்ற கட்டுரை நான்சி எழுந்தி இருந்தார். இதன் காரணமாக இவரது வழக்கு அமெரிக்காவில் பரவலாக பேசப்பட்டது.

நான்சி ‘தி ராங் ஹஸ்பண்ட்’, ‘தி ராங் லவ்வர்’ போன்ற குறு நாவல்களையும் எழுதியிருந்தார்.

# 27 ஆண்டுகளாக பயன்பாட்டில் இருந்த இன்டர்நெட் எக்ஸ்ப்ளோரர் நிறுத்தம்

27 ஆண்டுகளாக பயன்பாட்டில் இருந்த மைரோசாப்ட் நிறுவனத்தின் இன்டர்நெட் எக்ஸ்ப்ளோரர் சேவை இன்று புதன்கிழமையுடன் நிறுத்தப்பட்டுள்ளது.

1995 ஆம் ஆண்டு விண்டோஸ் 95 உடன் அறிமுகப்படுத்தப்பட்ட இன்டர்நெட் எக்ஸ்ப்ளோரர் 90ஸ் கிட்ஸ்களின் ஆடம்பர அறிவியல் உலகின் தொடக்கமாக இருந்தது.

காலப்போக்கில் இன்டர்நெட் எக்ஸ்ப்ளோரரை பயன்படுத்தும் மக்களின் எண்ணிக்கை மிக சொற்பமாக போனதாலும் மேம்படுத்திய தேடுபொறிகளின் வருகையாலும் அதன் சேவையை மைக்ரோசாப்ட் நிறுவனம் இன்றுடன் நிறுத்தியுள்ளது.

இதனால் 90ஸ் கிட்ஸ்கள் இன்டர்நெட் எக்ஸ்ப்ளோரர் உடனான நாஸ்டால்ஜிக் நினைவுகளை சமூக வலைதளங்களில் பகிர்ந்து வருகின்றனர்.

# கியூபாவில் போராடியவர்களுக்கு 25 ஆண்டுகள் வரை சிறை தண்டனை!

கியூபா அரசாங்கத்திற்கு எதிரான போராட்டங்களில் பங்கேற்றதற்காக சிலருக்கு 25 ஆண்டுகள் உட்பட 381 பேருக்கு தண்டனை விதித்துள்ளது.



29% பேர் தேசத் துரோகம், பொதுக் குழப்பம், தாக்குதல் அல்லது கொள்ளை போன்ற குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டுள்ளனர்.

கம்யூனிஸ்ட் நாடான கியூபாவில் சுதந்திரம் வேண்டும் என கோஷமிட்டே நாடு முழுவதும் ஆயிரக்கணக்கானோர் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

கடுமையான பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில், விலைவாசி உயர்வு மற்றும் உணவு மற்றும் மருந்து பற்றாக்குறையை சுட்டிக் காட்டி இந்த மாபெரும் ஆர்ப்பாட்டம் இடம் பெற்றது. தண்டனை விதிக்கப்பட்டவர்களில் 16 முதல் 18 வயதுடைய 16 இளைஞர்களும் அடங்குவர் என்று அனைத்தின் அரச தரப்பு சட்டத்தரணி கூறியுள்ளார்.

# அதட்டலான அன்பின் சொந்தக்காரர் அவர்...





ஜேம்ஸ் ஞானேந்திரன்




**அப்பாக்கள்** தினம் மீண்டும் வந்திருக்கின்றது. இத் தினம் வருவதால்தான் அப்பாக்கள் நினைவூட்டப்பட வேண்டும் என்பதில்லை. பத்து மாதங்கள் சுமந்து அரவணைத்து அன்பைப் பொழியும் அம்மாவைப் போல, நம்மை தோளில் சுமந்து, பாசப்பொழிவில் நம்மைத் திக்குமுக்காட வைப்பவர் அப்பா....

தலைக்கு மேலே உட்கார வைத்து, அழகு பார்க்கும் அப்பாவை நாம் ஒருபோதும் தலைகுனிய வைக்கக் கூடாது என்பதே இங்கே முக்கியம்!உலகம் காட்டி ,ஒவ்வொன்றாய் அறிய வைத்து, நடைபயிற்றுவித்து, நன்மை தீமை அறிய வைத்து காலமெல்லாம் கூடவே நடப்பவர் அப்பா என்பதை எந்தப் பிள்ளையும் மறக்காலாகாது.

## கொத்தப்படாத மண் செப்பனிடப்படுமா?

கண்டிப்பவர்தான் அப்பா என்ற பிம்பமே பிள்ளைகள் மனங்களில் படிந்திருக்கலாம்..கொத்தப்படாத மண்ணை எப்படிச் செப்பனிடலாம்?மண் மண்ணாகவே இருக்கும்வரை நமக்கு அதனால் அதிக பயனில்லை. அதுவே பண்படுத்தப்படும் போது, செழிப்பாக காய்த்துக் குலுங்கும் கனிகளை அது தருகிறதல்லவா?

அப்பாக்களும் இதையே செய்கிறார்கள்.

தன் பிள்ளை சிறப்பாக இருக்கு வேண்டும், ஒளிமயமான எதிர்காலம் இருக்க வேண்டும் என்பதற்காக திட்டமிடுகிறார். பாடுபட்டு உழைக்கிறார். சில சமயங்களில் கண்டிக்கிறார்கள். பிள்ளையின் உயர்வுக்காக பல தியாகங்களைச் செய்கிறார்.

ஒரு அப்பாவாக, ஒரு மகனாக என் வாழக்கை அனுபவங்ளை, உதாரணமாக உங்களுடன் பகிர்வதில் தவறில்லை என்று நம்புகிறேன்....

## சுமைகள் நீங்காதோ?

ஒரு பெரிய குடும்பத்தின் ஐந்தாவது பிள்ளை நான்.. அப்பா ஆங்கில ஆசிரியராகப் பணியாற்றியவர். இன்றைய கோலம் போல அன்றில்லை. அப்பா உழைப்பாளி, வீட்டுக்குள் வளைய வளைய வந்தவா் அம்மா! வீட்டு நிர்வாகி ! வீட்டுப் பணிகளை செய்து பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றிய இல்லத்தரசியாக இருந்தவர் அவர்..

பிந்திய திருமணம் என்பதால் தந்தை பதவி ஓய்வு பெறும்போதும், என் கடைசித் தம்பி பள்ளிக்கு போய்க் கொண்டிருந்தான்....

இதையெல்லாம் ஏன் சொல்கிறேன் என்றால், வீட்டு வருமானம் அப்பொழுது போதியதாக இருக்கவில்லை. அதிக எதிர்பார்ப்புகளுக்கு அங்கே இடமிருந்ததில்லை.வீட்டுப் பாவனைக்கு ஒரேயொரு மிதி வண்டி. எல்லோர் தேவைக்கும் அதுதான் பயன்பட்டது. அவசரத்திற்கு தேவைப்படுபவருக்கு கிடைக்காதது. பொடிநடையில்தான் அவசியப்படுபவற்றை செய்ய வேண்டியிருந்தது. இதை ஒரு சிறு உதாரணமாகக் காட்டுவது, அப்போதைய வீட்டின் நிதி நிலைமையை அறிய வேண்டும் என்பதற்காகவே!

இந்த நாட்களில் ஒரு மகனாக , நான் எனக்குள் எடுத்துக் கொண்ட தீர்மானம் இதுதான்.. பெற்றால் இரண்டு பிள்ளைகளோடு நிறுத்திக் கொள்வது..அவர்களுக்கு எந்தக் குறையும் தெரியாது வளர்ப்பது. என் இளவயதில் வைராக்கியமாய் நான் எனக்குள் எடுத்துக கொண்ட முடிவு இது!



ஜேம்ஸ் ஞானேந்திரனின் தந்தை

## இளைமையைத் தொலைத்தேன்

இறையருள் இருந்தமையால், என் மன வைராக்கியத்தை, நிஜத்தில் காட்டவும் முடிந்தது. இரு ஆண்கள் பிள்ளைகளாகக் கிடைத்தார்கள். சிறுவயதாக இருக்கும்போதே, அவர்கள் எதிர்கால வளம் கருதி வெளிநாடு பயணமானேன். இரு நாடுகளில் தொழிலாற்றி, வீடு திரும்பும்போது, 32 வருடங்கள் உருண்டோடி விட்டன. என் இளமையை அந்நிய மண்ணில் தொலைத்து விட்டாலும் மனதில் சஞ்சலம் இல்லை. பிள்ளைகள் படித்து முடித்து,உயர்வான இடங்களில் சிறப்பாக வாழ்வது, எனக்கு புதுப் பலம் தந்தது. வாழ்வில் இளமையைச் சோ்த்தது. எதற்கு ஆசைப்பட்டேனா அது சாத்தியமாயிற்று..வெளிநாட்டில் வாழ்ந்த உழைப்பில் இருவரையும் இங்கிலாந்து அனுப்பி,பட்டதாரிகளாக்கி, பொறியிலாளர்களாக்கினேன். இன்று குடும்பமாக சீரும் சிறப்புமாக தமது வாழ்க்கையை கழித்துக் கொண்டிருக்கிறார்கள்

அப்பாவின் அன்றைய பளு, எனக்குள் ஒரு மூச்சத் திணறலை முதலில் தந்து பின்பு ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தியது. நானும் அப்படியொரு பளுவால் திணறக்கூடாது என்ற முனைப்பில் திடமாக நின்று என் பிள்ளைகளின் வாழ்வை சிறப்பாக்கி இருப்பதில் பெருமைதான். என் பிள்ளைகளும் ஒரு தந்தையாக இன்று செய்வது, அவர்கள் பிள்ளைகளை ஒரு உயர்ந்த நிலைக்கு கொண்டுவரும் என்பதில் எனக்கு எந்தச் சந்தேகம் இல்லை.

சுயபுராணம் பாடுவதாக, தவறாக மதிப்பிட்டு விடாதீர்கள். ஒரு தந்தையாக என் கடந்த கால அனுபவத்தையும், இன்றைய கோலத்தையும் ஒரு முன்னுதாரணமாகச் சொல்ல முனைகிறேன் அவ்வளவுதான்.

## நீ பாதி நான் பாதி

குடும்பம் என்பது நீ பாதி நான் பாதி என்று கணவனும் மனைவியும் இணைந்து நடத்தும் ஒன்றுதான்.. எந்த ஆணோ, பெண்ணோ , இந்தத் திருமணத்தில்தான் முழுமை அடைவதுண்டு. அதுவரையில் அரைகுறையாக வாழ்பவர்கள்தான்!

சுகதுக்கங்களில் பங்கெடுத்து, தந்தையும் தாயும் குடும்பத்தை நிர்வகிப்பது செவ்வனே நடந்து விட்டால் வாழ்வே சொர்க்கம்தான்! இல்லாள் , மனையாள் என்ற சிறப்புப் பெயர்களை தாங்கி நிற்கும் தாய், வீட்டை நிர்வகிக்க, தனது உழைப்பால், வெளி வேலைகளை நிர்வகித்து, அழகான அன்பான குடும்பம் என்று பாராட்டும்படி, மனைவிக்கு துணைநின்று நடாத்துபவர் அப்பா! இரண்டு கைகளையும் தட்டினால்தான் ஓசை என்பதுபோல, அப்பாவும் அம்மாவும் கருத்தொருமித்து இணைந்து நடாத்தும் குடும்பமே, பிறர் போற்றும் குடும்பமாக இருக்கும்.

## எப்படி வந்தது?

எந்த நாளும் தானாகத் தோன்றுவதில்லை. ஒரு காரணம் பின்னணியில் இருக்கவே செய்கின்றது. ஆரம்ப காலத்தில் பத்தோடு பதினொன்று என்பது போல முக்கியத்துவமில்லாத ஒரு தினமாகத்தான் தந்தையர்தினம் நினைக்கப்பட்டது.. இது அதிகாரப் பூர்வமாக அறிவிக்கப்பட பல ஆண்டுகள் காத்திருக்க வேண்டியிருந்தது.சில பத்திரிகைகள் தந்தையர் தினத்தைக் கிண்டலும் நையாண்டியும் செய்து செய்திகள் வெளியிட்டன.1913 ஆம் ஆண்டு இதற்கான மசோதா தாக்கல் செய்யப்பட்டது.

முதன்முதலாக அமெரிக்க ஜனாதிபதி கால்வின் கூலிட்ஜ் 1924 இல் தந்தையர் தினத்திற்கு ஆதரவு தெரிவித்தார்.சட்டப்படி நடைமுறைக்கு வர 1966 ஆம் ஆண்டு வரை காத்திருக்க வேண்டியதாயிற்று.

ஜனாதிபதி லிண்டன் ஜான்சன் தந்தையர் தினத்திற்கு பெடரல் விடுமுறை என அறிவித்தார். 1972ஆம் ஆண்டு ஜனாதிபதியாக இருந்த ரிச்சார்ட் நிக்சன் ஜுன் மாதம் மூன்றாவது ஞாயிற்றுக்கிழமை தந்தையர் தினமாக கொண்டாடப்படுவதை உறுதி செய்தார்.



அந்தநாள்முதல் இன்றுவரை தந்தையர்தினம் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

இதுதான் அந்தச் சரித்திரம்.

## வள்ளுவர் வாய்மொழி

காலத்தால் அழியாத குறள் வரிகளைத் தந்த வள்ளுவர் அப்பாவை மறக்கவில்லை.

‘‘மகன் தந்தைக்கு ஆற்றும்
உதவி இவன்தந்தை
என்னோற்றான் கொல்எனும் சொல் ’’

இந்த இரு வரிகள் சொல்லும் செய்தி பெரிது. இப்படியொரு மகனைப் பெற இவன் தந்தை என்ன தவம் செய்தானோ என்று வியக்குமளவிற்கு , பிள்ளை வாழ்வில் தந்தைக்குச் செய்வதுதான் அந்தப் பேருதவி! இது ஆண்பிள்ளைக்கு மாத்திரமல்ல, பல துறைகளிலும் ஒளிர்கின்ற பெண் பிள்ளைகளுக்கும் இது பொருந்தும், நாட்டின் அதிபராகப் பொறுப்பேற்குமளவிற்கு, விண்வெளிக்கு பறந்து சென்று திரும்புமளவிற்கு வீராங்கனைகளாக உள்ள பெண்பிள்ளைகளும் இன்று பெற்றோர்க்கு பெருமை சேர்த்து வருகிறார்கள்.

தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என்பதை அடிக்கடி நினைவுறுத்திக் கொள்ளுங்கள். நீங்களும் ஒரு நல்ல தந்தையாக செயற்பட, இன்றே தயாராகுங்கள்.

முதல் கோணின் முற்றும் கோணும் என்பார்கள்.. அப்பா–பிள்ளை உறவு கோணினால், தொடரும் அனர்த்தங்கள் எண்ணிலடங்காதவை!!!ஆரம்பமே சறுக்கலாக வேண்டாமே!!!!!!!




# பாசத்தை வெளிப்படுத்தும் பாண் பட்டாணி பிரியாணி

*அன்னையிட்ட அமுது*
*உடலுக்கு உணவு.*
*தந்தையிட்ட தைரியம்*
*மனதுக்கு அமுது.*

**ஒரு** குழந்தையின் வாழ்க்கையில் தாய் மற்றும் தந்தை இருவரின் பங்கிற்கும் முக்கியத்துவம் உண்டு. அந்த வகையில் பெற்றோர்கள் எவ்வளவு முக்கியமானவர்கள் என்பது நாம் அனைவரும் அறிந்தது தான். இந்த வாரம் தந்தையர் தினம் வருகிறது. தந்தையர் தினம் என்பது தந்தையர்களை கௌரவிப்பதற்காக கொண்டாடப்படும் ஒரு நாளாகும்.

வாழ்க்கைச் சக்கரத்தில் வசதியாக நாம் வாழ்வதற்காக ஓயாமல் சுழலும் அன்புச் சக்கரம் நம் தந்தை. இன்றைய பரபரப்பான உலகில் குடும்பத்தின் வளர்ச்சிக்காக உழைக்க ஓடிக் கொண்டிருக்கும் தந்தைமார்களில், எத்தனையோ பேர் ஒரு படி மேலே சென்று, தன் குடும்பத்தை பிரிந்து வெளி நாடுகளில் உழைத்துக் கொண்டிருக்கின்றனர். எத்தனையோ சரிவுகளுக்கு பின்பும் தைரியமாய் சிரித்துக் கொண்டிருக்கும் அப்பாக்களுக்கு நிகரான தன்னம்பிக்கையூட்டும் புத்தகம் இந்த பிரபஞ்சத்தில் இல்லை.

எனவே சிறு வயதில் இருந்தே குழந்தைகள் தாய் மற்றும் தந்தையை மதிக்க கற்றுத் தருவதே இத் தினங்களின் நோக்கமாகிறது.

இன்றைய அவசர உலகில் நாம் நம் தந்தையருக்கு தள்ளாத வயதில் அவர்களுக்குரிய கடமைகளை செய்கின்றோமா? என்ற கேள்வியை நம்முள் நாமே கேட்டுப் பார்த்து நமதுதவறுகளை சரி செய்வதே இந் நாளின் முதற் பணியாகும். அன்றைய தினத்தில் மட்டுமல்ல என்றுமே தந்தையருக்கு நாம் செய்ய வேண்டிய கடமைகளை மனதில் இருத்தி வாழ்த்துவோம், வணங்குவோம் அவரை கொண்டாடுவோம்.

இந்த நாளில் தந்தையருக்கு பரிசுகளை கொடுப்பது மற்றும் சிறந்த விருந்தளிப்பது இந் நாளை இன்னும் சிறப்பானதாக மாற்றும். அவர் வாழும் காலத்திலேயே நமக்காகவே வாழும் ஒரு அன்பான மனிதரை கொண்டாடுவதே அவர்களுக்கு நாம் செய்யும் மரியாதையாக இருக்கும்.

நம் அப்பாவை கொண்டாட இந்த ஒரு தினம் மட்டும் போதாது என்றாலும், அன்றைய தினம் அவரை ஆச்சர்யப்படுத்தும் வகையில் நம் அப்பாவுடன் ஒரு சிறப்பான காலை உணவோ அல்லது மதிய உணவோ அல்லது இரவு உணவோ அவருக்கு பிடித்த உணவுகளை சமைத்துச் சாப்பிட்டு அவரோடு நேரம் செலவிடுவோம்.

உங்களுக்கும் உங்கள் தந்தைக்கு இந்த தந்தையர் தினத்தில் ஏதாவது செய்ய வேண்டும் என்ற ஆசை இருக்கும்.

தந்தையர் தினத்தில் அவருக்கு என்ன பரிசு வழங்கலாம்?

அச்சிடப்பட்ட டி– சேட் இதனை அவர் அணியும் போது உங்கள் நினைவு வரும்.

வாலெட் தோல் பொருட்களிலான வாலெட், பெல்ட் , சப்பாத்து உள்ளிட்டவற்றை பரிசளிக்கலாம். இதனை அவர் அன்றாடம் பயன்படுத்துவார்.





### நவநாகரீக ஆடைகள்

இவற்றினை பரிசளிக்கும் போது தந்தையை இளமையாக உணரச் செய்யலாம்.

### வாட்ச்

இன்று லக்சரி வாட்சுகள் முதல் ஸ்மார்ட் வாட்சுகள் வரை கிடைக்கின்றன. இவற்றை சர்பிரைஸ் கிப்ட்டாக வழங்கலாம்.

### போட்டோ பிரேம்

இன்று நாம் முன்பை விட அதிகமான புகைப்படங்கள் எடுத்துக் கொள்கிறோம். தந்தையுடன் நீங்கள் இருக்கும் ஒரு அழகான படத்தை பிரேமில் பொருத்தி பரிசளியுங்கள்.

இது அவர்களுக்கு பல ஆண்டுகளுக்கு நினைவாக இருக்கும்.

### செடி நடுதல்

சேர்ந்தே ஒரு செடியோ அல்லது மரக் கன்றோ நடுங்கள், அதை ஒன்றாக வளரக் காணுங்கள். இதை விட சூப்பரான சுற்றுச் சூழல் பரிசு இருக்க முடியுமா?

ஒரு நல்ல சுவையான உணவை விட நாளை தொடங்க சிறந்த வழி உண்டா? அலங்கரிக்கப்பட்ட மேசையில் சுவையான உணவுகளின் தொகுப்புகள் மற்றும் குடும்ப ஒன்று கூடலாக மாற்றினால் அது மறக்க முடியாத பரிசாக மாறும். இது அவரை நாம் எவ்வளவு நேசிக்கிறோம், அவர் நமக்கு எவ்வளவு முக்கியம் என்பதை சொல்லும்.

### பிரட் பட்டாணி பிரியாணி

**பாஸ்மதி அரிசி - 2 கப்**
**பாண் துண்டுகள் - 10**
**பச்சை பட்டாணி - 1கப்**
**தக்காளி - 4**
**பெரிய வெங்காயம் - 3**
**பிரியாணி இலை -2**
**பட்டர் -50 கிராம்**
**எண்ணெய் - தேவையான அளவு**
**உப்பு - சுவைக்கு**
**தண்ணீர் -தேவைக்கு**
**அரைக்க**
**சின்னவெங்காயம் - 15**
**சீரகம் - 15**
**காய்ந்த மிளகாய் - 8**
**பூண்டு - 6**
**நெய் - சிறிதளவு**
**தேங்காய் துருவல் - 3 மே.கரண்டி**
**மிளகு - 1 தே . கரண்டி**

முதலில் வெங்காயம் மற்றும் தக்காளியை வெட்டவும். அரிசியை கழுவி 30 நிமிடம் ஊற விடவும். பிரியாணி செய்யும் பாத்திரத்தை அடுப்பில் வைத்து சிறிதளவு பட்டர் போட்டு சூடாக்கி அதில் தண்ணீரில்லாமல் அரிசியை வடித்து போட்டு 5 நிமிடம் வறுத்து தனியாக வைக்கவும். அதே பாத்திரத்தில் பாண் துண்டுகளின் ஓரங்களை வெட்டிவிட்டு சதுரங்களாக வெட்டி அதனையும் சிறிதளவு பட்டர் போட்டு வறுத்து எடுத்து தனியாக வைக்கவும். அரைக்க கொடுத்தவற்றை அரைத்து வைக்கவும். சிறிதளவு எண்ணெய் விட்டு அதில் பிரியாணி இலை தாளித்து வெட்டிய வெங்காயம் வெட்டிய தக்காளியை சேர்த்து வதக்கவும். அரைத்த மசாலாவுடன் பச்சை பட்டாணியை சேர்த்து வதக்கி உப்பும் கலந்து அரிசி அவிய போதுமான தண்ணீர் விட்டு கொதி வந்த பிறகே அரிசியை போட்டு ஒரு மூடி போட்டு வேகவிட்டு 20 நிமிடம் கழித்து மூடியை திறந்து வறுத்த பாண் துண்டுகளை சேர்த்து சிறிதளவு நெய் விட்டு மீண்டும் இறுக்க மூடி விட்டு 5 நிமிடம் சூட்டில் வைத்திருந்து விட்டு கலந்து பரிமாறவும். சுவையான பிரட் பட்டாணி பிரியாணி தயார்.



பிரமிளா நாகேஸ்வரராஜா




### (டெசட்) ஷங்காய் அப்பிள்

**அப்பிள் - 4**
**முட்டை - 1**
**கோதுமை மா - 3 மே. க**
**தண்ணீர் -1/4 லீட்டர்**
**சீனி - 6 மே .க**
**எள்ளு - 1மே.க**

### எண்ணெய் - பொரிக்க

அப்பிளின் தோலையும் விதைகளையும் நீக்கி விட்டு ஓரளவு பெரிய சதுர துண்டுகளாக வெட்டவும். ஒரு பௌவுலில் முட்டை மற்றும் கோதுமை மாவை கலந்து அதில் அப்பிள் துண்டுகளை முக்கி எடுத்து சூடான எண்ணெயில் போட்டு பொன்னிறத்துக்கு பொரித்து எடுக்கவும். ஒரு மேசைக்கரண்டி எண்ணெயை சூடாக்கி அதில் சீனியை சேர்த்து 5 நிமிடம் சமைத்து அதில் பொரித்தெடுத்த அப்பிள் துண்டுகளையும், எள்ளையும் சேர்த்து விட்டு ஜில்லென்று இருக்கும்

தண்ணீரை அதன் மேல் ஊற்றி குளிர வைக்கவும். தண்ணீரை வடிகட்டிவிட்டு பரிமாறவும். இதனை தனியாகவும் சுவைக்கலாம் அல்லது வெனிலா ஐஸ்கிரீம் வைத்தும் டெசெட்டை பரிமாறலாம்.

அன்றாட வாழ்க்கை அவசரமும் மன அழுத்தமும் நிறைந்தது.

அன்றைய தினத்தில் இப்படி சமைத்து பரிமாறினால் அப்பா மகிழ்ச்சியுடன் ஆச்சரியப்படுவார் என்பது உறுதி.

அனைத்து தந்தையருக்கும் அன்பான தந்தையர் தின வாழ்த்துகள்.



# அப்பா என்பது வார்த்தையல்ல; வாழ்க்கையே!


புஸ்பராசா
கோபிகா




**கையில்** இருக்கும்போது தெரியாத அருமை, அதை தொலைத்த பின்பே நன்றாக தெரியும்.இது அனைவரது வாழ்க்கையிலும் அனைவரும் கண்ட அனுபவப்பாடம் என்றால், அந்த வார்த்தையில் மிகைப்படுத்தல் இல்லையே, இந்த அனுபவமானது பெற்றோரை இழந்தவர்களுக்கு மிக அதிகமே. அவர்களுக்கு வாழ்க்கையின் நிதர்சனத்தை உணர்த்திவிடும். அதிலும் குறிப்பாக தந்தையை இழந்தவர்களுக்கு அது வெறும் இழப்பாக தெரியாது.அப்பா இல்லாது தங்களது வாழ்க்கை திசைமாறிப் பயணிப்பதை உணருவார்கள். அப்பாவின் கண்ணீரை கண்டவர்களும், அவரை இழந்தவர்களும் பெரும் துர்ப்பாக்கியவாதிகள் என்றே கூறவேண்டும்.

அப்பாவின் சிறப்பையும், பெருமையையும் கூறின், அதற்கு வார்த்தைகள் போதாதல்லவா? அன்பு, அரவணைப்பு, தியாகம், துணிச்சல் என அனைத்திற்கும் அடையாளமே அப்பா தானே. இறைவனின் முழு உருவமாய் பூமியில் வாழ்ந்து வருபவர்களே அனைவரது அப்பாக்களும். ஆனாலும் அதை எம்மில் யாரும் அவ்வளவு விரைவாக உணர்வதில்லை. அவர்கள் உணரும் போது அப்பா இவ்வுலகில் அவர்களுடன் இணைந்து இருக்கமாட்டார். தொலைத்த பின்பே தேடுவோம். எவ்வளவு தேடினாலும் கிடைக்க போவதில்லை என்று தெரிந்தும் எத்தனை காலம் கடந்தாலும் அம்மாவினதும், அப்பாவினதும் நினைவுகள் மனதை விட்டு மறைந்துவிடாது. மனங்களில் ரணங்களாகவே இருக்கும்.

அறியாவயதில் நிகழும் அப்பாவின் இழப்பானது அவ்வளவாக மனதை காயப்படுத்தாது. ஏனெனில் அந்த நேரம் அப்பாவின் அன்பு, அரவணைப்பு, தியாகத்தைப் பற்றி அறிந்திருக்கவோ,உணர்ந்திருக்கவோ மாட்டோம். ஆனால் வளரும் பருவத்தில் அப்பா இல்லாதுபோனால், அது வாழ்க்கையை புரட்டி போட்டு விடும்.



என்பதில் எதுவித மாற்றமும் இருக்காது. அப்பா கூட இருக்கும் போது நாம் வாழ்ந்த வாழ்க்கை அப்பாவின் மறைவின் பின் தடம் மாறிப் பயணிக்கும் என்பதில் ஐயமில்லை. பாசத்திற்கும், அரவணைப்பிற்கும் மனம் ஏங்கத்தொடங்கிவிடும். அப்பா இருந்திருந்தால் இந்த நேரம் இன்னும் சந்தோஷமாக இருந்திருக்கும் என்ற வாழ்வின்



ஒவ்வொரு தருணங்களும் அப்பாவின் நினைவுகளை மீட்டுத் தந்த வண்ணமே இருக்கும். அதுபோலவே ஏதாவது பிரச்சனை என்றாலோ, கஷ்டம் என்றாலோ, அப்பா இருந்திருந்தால் எனக்கு இந்த நிலை ஏற்பட்டிருக்குமா? என்று மனம் தவிக்கும். இதுவொன்றே போதும் எம் வாழ்க்கையில் சந்தோசம், துக்கம் இரண்டிலும் தந்தை என்பவர் துணையாக தேவை என்பதை உணர்த்துவதற்கு.

அப்பா இருக்கும் வரையில் சொந்த பந்தங்கள் என்று எத்தனையோ பேர் எம்மை சூழ்ந்திருப்பார்கள். ஆனால் அப்பாவின் மறைவின் பின் நெருங்கிய ஒரு சில உறவுகளே நல்லதோ, கெட்டதோ துணையாக வருவார்கள். அப்பா இழப்புடன் பல உறவுகள் மாயமாகிப் போய்விடும். அவ்வாறான சுயநலமான உறவுகள் விலகிவிட்டது என கவலை கொள்வதில்லை.அப்பா என்று சொந்தம் இருக்கும்போது கூட இருந்த உறவுகள் அனைத்து நமக்காக இருக்கவில்லை. மாறாக அப்பாவிற்காக, அப்பாவுடன் சேர்ந்து எமக்காய் இருந்திருக்கும் போல். எத்தனை சொந்தம் விட்டு விலகிச் சென்றாலும், அப்பாவின் இழப்பு தந்ந வலியை வேறெதுவுமே தந்துவிடாது.

அப்பாவின் கண்ணீரை காண்பவர்கள் துர்ப்பாக்கியவாதிகள் என்பார்கள். ஆம், அது உண்மை தான். அப்பா எத்தனை கஷ்டம்,தோல்வி, ஏமாற்றம் வந்தாலும் துவண்டுவிடமாட்டார். அவ்வாறாக மனமுடைந்தால் கூட அதை தனது பிள்ளைகள் முன்பு வெளிக்காட்டுவதில்லை. அவர்கள் முன்பு தன்னை மிகவும் துணிச்சலானவராகவே காண்பிப்பார். அது அவரது சுயகௌரவத்திற்காக அல்ல. தான் மனம் உடைந்துவிட்டால் தனது பிள்ளைகள் தாங்கிக்கொள்ள மாட்டார்கள் என்ற எண்ணத்தில் மாத்திரமே.

அதையும் மீறி அவர்கள் பிள்ளைகள் முன் அழுதால்,அது அவர்களின் ஆனந்த கண்ணீராகவே இருக்க வேண்டும். அப்பா மனமுடைந்து அழுமளவிற்கு அவரது பிள்ளைகள் நடந்து விடக்கூடாது. 'அப்பா உங்களுக்கு நாங்கள் இருக்கின்றோம்.நீங்கள் கவலைப்படாதீர்கள். என்று ஆறுதல் கூறின், அத்தருணம் அப்பாவின் மனமானது ஆயிரம் யானை பலத்தை பெற்றுவிடும். அந்தளவிற்கு அவர்கள் மனமும் நிறைந்துவிடும். ஒவ்வொரு அப்பாக்களும் எத்தனை கஷ்டம் தாண்டி தனது பிள்ளைகளுக்கு கல்வியை கற்பிப்பார்கள். ஏனெனில் தனது பிள்ளை தன்னை போல எந்த வகையிலும், எதற்காகவும் கஷ்டப்படாது நல்ல நிலைக்கு

> **அப்பா இருக்கும் வரையில் சொந்த பந்தங்கள் என்று எத்தனையோ பேர் எம்மை சூழ்ந்திருப்பார்கள். ஆனால் அப்பாவின் மறைவின் பின் நெருங்கிய ஒரு சில உறவுகளே நல்லதோ, கெட்டதோ துணையாக வருவார்கள். அப்பா இழப்புடன் பல உறவுகள் மாயமாகிப் போய்விடும். அவ்வாறான சுயநலமான உறவுகள் விலகிவிட்டது என கவலை கொள்வதில்லை. அப்பா என்று சொந்தம் இருக்கும்போது கூட இருந்த உறவுகள் அனைத்து நமக்காக இருக்கவில்லை. மாறாக அப்பாவிற்காக, அப்பாவுடன் சேர்ந்து எமக்காய் இருந்திருக்கும் போல். எத்தனை சொந்தம் விட்டு விலகிச் சென்றாலும், அப்பாவின் இழப்பு தந்ந வலியை வேறெதுவுமே தந்துவிடாது.**

வரவேண்டும் என்பதற்காகவே. அவ்வாறு எத்தனையோ கஷ்டங்களை தாண்டி அப்பாவின் ஆசைக்காக, எதிர்பார்ப்பிற்காக நன்றாக கல்வி கற்று பரீட்சையில் சித்தியடைந்து, வாழ்க்கையின் அடுத்தநிலைக்கு செல்வதற்கான தருணம் வரும்வேளையில், அப்பா உயிருடன் இல்லையென்றால், அந்தப்பிள்ளையின் மனம் எவ்வளவு வேதனையடையும். என்னதான், பரீட்சையில் சித்தியடைந்துவிட்டோம். என்ற திருப்தியும், மகிழ்ச்சியும் இருந்தால் கூட, இதற்காகத்தானே அப்பா இவ்வளவு கஷ்டப்பட்டவர். இந்தவொரு தருணத்திற்காக தானே வெயில்,மழை பாராது அயராது எங்களுக்காக உழைத்தவர். இவ்வாறு எனது வெற்றியில் பங்குகொள்ளாது போய்விட்டாரே, என்று எத்தனை எண்ணங்கள் மனதை வாட்டியவண்ணம் இருக்கும். அதுபோலவே தனது முதல்மாத சம்பளத்தில், அம்மாவிற்கும், அப்பாவிற்கும் அவர்களுக்கு பிடித்த ஏதாவது வாங்கிக்கொடுப்பதே அனைத்து பிள்ளைகளது எதிர்பார்ப்பாகவும், ஆசையாகவும் இருக்கும். ஏன் இலட்சியம் என்றுகூற சொல்லலாம். ஆனால் அந்த பாக்கியம் அனைவருக்கும் கிடைத்துவிடாது. உண்மையிலே அந்த தருணங்களில் அப்பா உயிருடன் இல்லையே என்பது வலி நிறைந்த ஒன்றே. அதை வார்த்தைகளுக்குள்ளும் அடக்கிடமுடியாது.

இவ்வாறாக கூறிக்கொண்டே போகலாம். அப்பாவை இழந்தவர்கள் படும் கஷ்டங்களை. இல்லாதவர்கள் மனம்படும் வேதனையை இருப்பவர்கள் உணர்ந்து நடந்தால், இருக்கும் போதே அப்பாவின் மனதை தெரிந்து நடந்தால், இது போல் வாழ்க்கையில் வேறெதுவும் நிம்மதியை தந்துவிடாது. தொலைத்துவிட்டு அதன்பின் தேடாது, இருக்கும்போதே எதிர்பார்த்தபோல் வாழ்ந்துவிட்டு போவதே சிறந்தது. எமக்காக தனது சந்தோசத்தை தியாகம் செய்பவருக்காக, அவரின் எதிர்பார்ப்புக்களை அறிந்து, எம்மால் இயன்றவரை சந்தோசமாக வைத்திருந்து, அவரின் மனநிறைவால், நாம்பெறும் ஆசிர்வாதம் எமக்கு சிறந்ததொரு வாழ்க்கையை பரிசளிக்கும். நோய்வாய்ப்பட்டுருக்கும் போது அப்பாவிற்கு தாய்,தந்தையாய் மாறி பணிவிடை செய்யவேண்டும். வாழ்க்கையில் இழக்கக்கூடாத உறவில் அப்பாவும் ஒருத்தரே. அப்பா என்பது வெறும் மூன்றெழுத்து வார்த்தையல்ல. அதுவே ஒவ்வொரு பிள்ளைகளதும் வாழ்க்கை. அப்பாவின் அருமையை உணர்ந்து, அவர் மனம் கோணாது நடந்து, இந்த வாழ்க்கையை அழகாக்குவோம்.

'காலம் கடந்த பின் ஞானம் வேண்டாம் ஞானத்தை கற்றுத்தரும் அப்பாவின் மகிழ்ச்சிக்காய் புது வாழ்க்கையொன்றை உருவாக்குவோம்.'

# சிறுவர் துஷ்பிரயோகங்களும் முன்னெடுக்கப்பட வேண்டிய பாதுகாப்பு பொறிமுறைகளும்





### சிறுவர் துஷ்பிரயோகம் என்றால் என்ன?

சிறுவர்களை உடல், உளரீதியாக தாக்குதல், பீதி அடையச்செய்தல், தொழிலுக்கு அமர்த்துதல், புறக்கணித்தல், அன்பு செலுத்தாமை, பாலியல் துன்புறுத்தல்கள், அவர்களுக்குரிய உணவு, உடை, கல்வி, சுகாதாரம் , பாதுகாப்பு என அனைத்தையும் வழங்காமல் இருப்பது சிறுவர் துஸ்பிரயோகமாக பார்க்கப் படுகிறது.

### சிறுவர் என்று அழைக்கப்படுவோர் யார்?

இன்றைய காலகட்டத்தில் உலகளாவிய ரீதியில் சிறுவர்கள் மீதான வன்முறைகள், துஷ்பிரயோகங்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டுச் செல்கின்றன. சிறுவர்களைப் பாதுகாப்பதும் அவர்களை நற்பிரஜைகளாக உருவாக்குவதும் இலங்கைவாழ் மக்களாகிய எமது ஒவ்வொருவரினதும் கடப்பாடாகும். சிறுவர்களையும் அவர்களின் உரிமைகளையும் பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்ட ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமை பட்டயம் பதினெட்டு வயதிற்கு உட்பட்ட அனைவரையும் சிறுவர்கள் என இனங்காண்கிறது.

### சிறுவர் பாதுகாப்பு அமைப்புகள்

இன்று இலங்கையில் சிறுவர்களின் பாதுகாப்பிற்காக இலங்கை தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை, மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு, அரச சார்பற்ற நிறுவனங்கள், சங்கங்கள், சிறுவர் இல்லங்கள் ஆகியன இயங்கி வருகின்றன. இருப்பினும் சிறுவர்களின் பிரச்சினைகள் தொடர்கதையாக இருந்து வருகின்றதை அவர்களுக்கு எதிராக நடத்தப்பட்டு வருகின்ற துஷ்பிரயோகங்கள் தெளிவுபடுத்துகின்றன. நாளைய சமுதாயத்திற்கு வழிகாட்டும் இன்றைய சிறுவர்கள் தொடர்ந்து நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து வருவதனால் அது ஒரு நாட்டின் அபிவிருத்திக்கும் பெரும் சவாலாக அமைகின்றது. நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, கொரோனா தொற்று நோய், இயற்கை அனர்த்தங்கள் என மக்கள் மனதில் அமைதி இழந்திருக்கும் நிலையில் நாளுக்கு நாள் சிறுவர்கள் மீதான துஷ்பிரயோகங்களும் மக்களை பீதி கொள்ள வைத்துள்ளது.

### நாட்டில் ஏற்பட்ட சிறுவர் துஸ்பிரயோகங்களின் பதிவுகள்

அண்மை காலங்களில் இலங்கையில் நடந்த சில சிறுவர் துஸ்பிரயோகங்களையும், உயிரிழப்புகளையும் ஊடகங்களின் வாயிலாக அறியமுடிந்தது. பெரும் வேதனைக்குரிய இந்தச் செயல்கள் இந்த நாட்டில் வாழும் கொடூர மனித மனங்களையும் நாட்டின் அபிவிருத்திப் பின்னடைவையும் தெளிவாகக் காட்டுகிறது. வவுனியா – கணேசபுரத்தைச் சேர்ந்த ராசேந்திரன் யதுர்சினி என்ற பதினாறு வயது சிறுமியை இரக்கமற்ற நிலையில் கொலைசெய்து கிணற்றில் வீசியுள்ளனர். பெற்றோர் அற்ற நிலையில் உறவினரோடு வாழ்ந்த இந்தச் சிறுமிக்கு உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது.

அட்டலுகம பகுதியில் ஆயிஷா என்ற 9 வயது சிறுமியொருவர் தனியே கடைக்குச் சென்று திரும்பி வரும் வழியில் இளைஞர் ஒருவர் கடத்திச் சென்று பாலியல் துஸ்பிரயோகம் செய்யமுயற்சி செய்து தோல்வியுற்று விடயம் வெளியல் கசிந்து விடும் என்று பயந்து சதுப்பு நிலத்தில் அமிழ்த்தி கொலை செய்துள்ளார்.

அம்பாறை மாவட்டத்தின் அக்கறைப்பற்று பிரதேசத்தில் 11 வயதையுடைய சிறுமியொருவர் இரவு வேளையில் கடற்கரைக்குச் சென்று வந்தபோது வரும் வழியில் உறவினர்களே கடத்திச் சென்று பாலியல் துஸ்பிரயோகம் செய்துள்ளனர். இந்தச் சிறுமியை இரவு வேளையில் பெற்றோர் வெளியில் அனுப்பிவிட்டு இருந்துள்ளமை இவர்களுக்கு பிள்ளைகள் மீதான கரிசனை பார்வை இல்லையென்பதையே தெளிவூட்டுகின்றது.



சி.ரஞ்சிதா

பெரிய நீலாவணை பகுதியில் மின்சார சபை ஊழியர் ஒருவர் வீடொன்றில் ஏற்பட்ட மின்சார கோளாரை சரிச்செய்ய சிறுவன் ஒருவனை துணைக்கழைத்துச் சென்று துஸ்பிரயோகம் செய்துள்ளார். கொஸ்கொட தியகம பகுதியைச் சேர்ந்த 7 வயது சிறுமி ஒருவர் புகையிரதத்தில் மோதி உயிரிழந்துள்ளார். இந்தச் சிறுமிக்கு பெற்றோர் அல்லது பாதுகாவளர் இல்லையா? என்ற ஐயமும் இவர் புகையிரதக் கடவைக்குச் செல்வதை பொதுமக்கள் எவரும் அவதானிக்கவில்லையா என்பது பற்றியும் எவ்வித தகவல்களும் இதுவரை தெரியவரவில்லை. எனினும் ஒரு சிறுமியை பொறுப்பற்ற முறையில் கைவிட்டு சிறுவரின் உரிமை, பாதுகாப்பு குறித்து சிந்திக்காமல் இருந்தமை பெருங்குற்றமாகும்.

பொகவந்தலாவைச் சேர்ந்த 16 வயதுடைய பாடசாலை மாணவன் ஒருவன் தன் தந்தையோடு விறகு வெட்டச் சென்ற இடத்தில் மரம் ஏறி விழுந்து உயிர் இழந்துள்ளான். குடும்பத்தில் முதலாவது பிள்ளையான இச்சிறுவன் பாடசாலை நாட்களைத் தவிர்த்து வேலைகளுக்குச் செல்வதாகவும் குடும்பப் பொறுப்பை சுமப்பதாகவும் இச்சிறுவனோடு பழகியவர்களினூடாக அறியமுடிகின்றது.

சென்ற வருடம் இஷாலினி என்னும் சிறுமியொருவரும் அமைச்சர் ஒருவரின் வீட்டிலிருந்து தீக்காயங்களோடு உயிர் நீத்தமை இலங்கையை ஆட்டம்காண வைத்த செயலாக பதிவாகிறது. இலங்கையைப் பொருத்தவரை சிறுவர்கள் மீதான வன்முறை, பாலியல் சீண்டல்கள் என்பன நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றமையை ஊடகங்கள் வாயிலாக வெளிவந்த தகவல்களினூடாக அறிகின்றோம்.

இலங்கையில் இவ்வாறான சிறுவர் துஸ்பிரயோகங்கள் தொடர்ந்து அதிகரித்து வருகின்றமைக்கு யார் காரணம்? என்ற வினா எழும்போது பொறுப்பற்ற பெற்றோர்களே இதற்கு முதலாவது காரணம் என்று சொல்லவேண்டியிருக்கிறது. பெற்றோர்களுக்கு பின்னரே சிறுவர்கள் இந்தச் சமூகத்திற்குள் அறிவை, அனுபவத்தைப் பெற்றுகொள்ள நுழைகின்றனர். முறையான சுகாதாரம் மேலே சுட்டிக்காட்டிய தகவல்களின் பிரகாரம் பெற்றோர்கள் பொறுப்பற்று பிள்ளைகளைத் தெருவிற்கு அனுப்புவதாலும் வீட்டுப் பணிப்பெண்களாக அனுப்புவதாலும் இரவில் வெளியில் போய் வரும்போது பாதுகாப்பு வழங்காமையாலும் அவர்களை இடைநடுவில் தவிக்கவிட்டு இன்னுமொரு திருமணம் செய்வதாலும் சிறுவர்கள் மீதான வன்முறைகள் தொடர்கின்றன. பிள்ளைகளைளப் பெறுவதால் மட்டும் எல்லோரும் பெற்றோர்களாக முடியாது. பிள்ளை வளர்ப்பு, குழந்தை உளவியல், சிறுவர் பராமரிப்பு தொடர்பான அறிவிலிகள் அனைவரும் இந்த பூமியின் மேற்பரப்பில் வாழ்வதற்கு தகுதியற்றவர்களே. சிறுவர் பாதுகாப்பு தொடர்பான அமைப்புகள், அது தொடர்பான விழிப்புணர்வுகள் ஆங்காங்கு ஏற்படுத்தப்பட்டாலும் தெளிவடைவது ஒரு சில பெற்றோர்கள் மட்டுமே என்பது கவலைக்குரிது.



> ஒவ்வொரு சிறுவனும் சிறுமியும் எதிர்காலத்தில் இந்தத் தேசத்தின் கதாநாயகர்கள் என்பதை பெற்றோரும் இந்தச் சமூகத்தின் ஏனைய உறுப்பினர்களும் உணர்ந்து கொண்டு செயற்படுவதன் மூலம் முடிந்தவரை சிறுவர்கள் மீதான வன்முறைகளைக் குறைத்துக் கொள்ளலாம். வளமான நற்பிரஜைகளை உருவாக்கலாம்.




### சிறுவர்கள் மீதான வன்முறைகளை குறைப்பதற்கான சில வழிமுறைகள்

பிள்ளையின் கல்வி, விளையாட்டு, கலை முதலான அறிவு, சுதந்திரம் பாதிக்காத வகையில் பெற்றோர் அல்லது பாதுகாவலர் அவர்களுக்கு துணையாக அருகில் இருத்தல் அவசியமாகும்.

புதிய நபர்களையோ அல்லது உறவினர்களையோ அயலவர்களையோ நம்பி பிள்ளைகளை அவர்களது வீட்டிற்கு அனுப்புவது, பாதுகாப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்வதை தவிர்த்தல் வேண்டும். சிறுவர்களைப் பாதுகாப்பது தொடர்பான விழிப்புணர்வு தகவல்களைப் பெற்றோர், அவர்களைச் சார்ந்து இருப்போர் கவனத்தில் கொள்ளவேண்டும். பெற்றோர் முடிந்தவரை தமது பிள்ளைகளுக்கு தன்னைத்தானே பாதுகாத்துக்கொள்வதற்கான வழிமுறைகளைக் கற்றுக்கொடுக்க வேண்டும்.

பாடசாலைகளுக்குப் பிள்ளைகளை அனுப்புவதோடு, பாடசாலை நிர்வாகத்தோடு வகுப்பாசிரியரோடு தொடர்பை பேணி பிள்ளையின் பாதுகாப்பை அடிக்கடி உறுதி செய்யவேண்டும்.

பிள்ளைகளை எப்போதும் அன்பாக பெற்றோர்களும் அவர்ளின் பாதுகாவலர்களும் நடத்த வேண்டும்.

பிள்ளைகளுக்கு பயத்தை ஏற்படுத்துவதைவிட இந்தச் சூழல்தொடர்பான அறிவு, பல்வேறு மனித நடத்தைகள் பற்றிய தெளிவை வழங்க ஆவணம் செய்தல் வேண்டும்.

### முடிவுரை

ஒவ்வொரு சிறுவனும் சிறுமியும் எதிர்காலத்தில் இந்தத் தேசத்தின் கதாநாயகர்கள் என்பதை பெற்றோரும் இந்தச் சமூகத்தின் ஏனைய உறுப்பினர்களும் உணர்ந்து கொண்டு செயற்படுவதன் மூலம் முடிந்தவரை சிறுவர்கள் மீதான வன்முறைகளைக் குறைத்துக்கொள்ளலாம். வளமான நற்பிரஜைகளை உருவாக்கலாம்.



# மதவாதம் மாற்றியமைக்குமா மக்கள் மனநிலையை?



பி.மாணிக்கவாசகம்

உலக நாடுகள் பலவும், அபிவிருத்தி நலன்களைப் பின்தள்ளி உணவுப் பாதுகாப்பில் சிக்கல்களை எதிர்கொள்ளும் நிலைமைக்கு ஆளாகியிருக்கின்றன. கொரோனா வைரஸ் நோய்ப் பேரிடர் வருவாய்களைக் குறைவடையச் செய்து விநியோகத் தொடர்புகளை சீர்குலைத்துவிட்டது. எனினும் இதற்கு முன்னதாகவே முரண்பாடுகள், சமூகப் பொருளாதார நிலைமைகள், இயற்கைப் பேரனர்த்தங்கள், கால நிலை மாற்றம், பயிர்ச்செய்கையின் பீடைப் பரவல் போன்ற பல்வேறு காரணங்களினால் நாடுகள் உணவுப் பாதிப்பிற்கு உள்ளாகியிருந்தன. அந்த வகையில் இலங்கையும் நெருக்கடிகளை எதிர்கொண்டிருக்கின்றது.

> குருந்தூர்மலை ஆலயப் பிரதேச ஆக்கிரமிப்பு இருப்பினும் மக்களால் வெறுத் தொதுக்கப்பட்டுள்ள பொதுஜன பெரமுன கட்சியினருடைய பெரும்பான்மை ஆதரவிலேயே ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் புதிய அரசாங்கத்தை ஜனாதிபதி கோத்தாபாய ராஜபக்ஷ உருவாக்கி இருக்கின்றார். ஆனாலும் போராட்டத்தில் குதித்துள்ள மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றும் வகையில் சர்வகட்சிப் பிரதிநித்துவத்தைக் கொண்ட இடைக்கால அரசாங்கமே உருவாக்கப்பட்டிருக்கின்ற என்ற போலிப் பிரசாரமும் அரச தரப்பினரால் முன்னெடுக் கப்பட்டிருப்பதைக் காண முடிகின்றது.



கொரோனா நோய்ப் பேரிடருக்குப் பின்னர் உக்ரெய்னில் மூண்ட யுத்தம் உலக உணவுப் பாதுகாப்பை நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது. கோதுமை உற்பத்தியின் முன்னணி நாடுகளாகிய ரஷியாவுக்கும் உக்ரெயினுக்கும் இடையிலான இந்த யுத்தம் உணவுப் பொருட்களின் விலைகளை முடிவு காலம் தெரியாத வகையில் அதிகரித்திருக்கின்ற ஆபத்தையும் ஏற்படுத்தி இருக்கின்றது. குறிப்பாக கோதுமை மா உணவு விநியோகத்தை வெகுவாகப் பாதித்து பற்றாக்குறை நிலைமைக்குத் தள்ளியிருக்கின்றது. இதனால் உலகில் மில்லியன் கணக்கான மக்கள் உணவு நெருக்கடிக்கு முகம் கொடுத்திருக்கின்றார்கள்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள உணவுப் பாதுகாப்பற்ற நிலைமையினால் நாட்டின் சனத்தொகையில் 22 வீதமான மக்கள் உணவுத் தேவைப்பாட்டு உதவி நிலைமைக்குத் தள்ளப்பட்டிருப்பதாக உலக உணவுத் திட்டத்தின் ஆசிய பசுபிக் பிராந்தியப் பிரதி பணிப்பாளர் அன்தியாவெப் தெரிவித்துள்ளார். உலகின் உணவுப் பாதுகாப்பு நிலைமைகளை அறிக்கையொன்றில் விபரித்துள்ள உலக வங்கி, இந்த நிலைமைகளை எதிர்கொள்வதற்கான வேலைத்திட்டங்கள் குறித்து கவனம் செலுத்தி இருக்கின்றது. உலகளாவிய இந்தக் கவனம் இலங்கையின் நிலைமைகளில் மாற்றத்தை உடனடியாகக் கொண்டு வரும் என்று கூறுவதற்கில்லை. உலக வங்கியினதும், சர்வதேச நாணய நிதியத்தினதும் இலங்கைக்கான உதவிகள் இன்னும் பேச்சளவிலேயே இருக்கின்றன. அதேவேளை, இலங்கைக்கு உதவுவதற்கான ஐநா மன்றத்தின் உதவிச் செயற்திட்டமானது யானைப் பசிக்கு சோளப்பொறி என்ற அளவிலேயே இருக்கும் என்று வர்ணிக்கப்படுகின்றது.

அடுத்தடுத்த நாட்களில் என்ன செய்வது என்று தெரியாத அளவில் நாட்டின் பொருளாதார நிலைமைகள் சீரழிந்திருக்கின்றன. உணவு, எரிபொருள் மற்றும் மருத்துவம் உள்ளிட்ட சேவைகளை சீராக வழங்குவதற்கும், அதற்கு அவசியமான பொருட்களை இறக்குமதி செய்வதற்கும் வழியின்றி அரசாங்கம் விழிபிதுங்கி நிற்கின்றது.

இந்த நிலையில் உணவு உள்ளிட்ட அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள என்ன செய்வதென தெரியாமல் மக்கள் அலைமோதிக் கொண்டிருக்கின்றார்கள். அன்றாட வாழ்க்கைக்கே அல்லாடிக் கொண்டிருக்கின்ற மக்களுக்கு நம்பிக்கை அளிக்கத்தக்க வகையிலான வழிகளைக் காட்ட வேண்டிய நெருக்கடி முகாமைத்துவ முகாமையாளராகிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாட்டின் உண்மையான நிலைமைகளை வெளிப்படுத்தும் வகையில் அபாய அறிவிப்புக்களை மாத்திரமே வெளியிட்டுக் கொண்டிருக்கின்றார்.

நாட்டின் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்கின்ற நெருக்கடி முகாமையாளராகத் தன்னை இனம் காட்டியுள்ள அவர், உண்மையில் நெருக்கடி முகாமைத்துவத்துக்குரிய ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை முன்னெடுத்திருக்கின்றாரா என்ற கேள்வி எழுந்துள்ளது. பொருளாதார நிபுணர்கள், துறைசார்ந்த வல்லுனர்கள் மட்டுமன்றி சாதாரண மக்களின் மனங்களிலும் இந்தக் கேள்வி எழுந்திருக்கின்றது

நாட்டைப் பாதுகாத்து பேரின மக்களின் நலன்களை மேம்படுத்துவதற்காக ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியிருப்பதாகக் கருதப்பட்ட ராஜபக்ஷக்களின் செயற்பாடுகளில் நம்பிக்கை இழந்துள்ள மக்கள்

II ஆம் பக்கம் பார்க்க...








# மதவாதம் மாற்றியமைக்குமா மக்கள் மனநிலையை?

அவர்களை அரசியலில் இருந்து விலகி வீடுகளுக்குச் செல்லுமாறு போராடி வருகின்றார்கள். முழு அரசாங்கமும் பதவி விலக வேண்டும். ஆட்சி முறைமை முழுமையாக மாற்றி அமைக்கப்பட வேண்டும். இடைக்காலத் தீர்வாக சர்வ கட்சி ஆட்சியொன்றை உருவாக்க வேண்டும் என்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. குருந்தூர்மலை ஆலயப் பிரதேச ஆக்கிரமிப்பு இருப்பினும் மக்களால் வெறுத்தொதுக்கப்பட்டுள்ள பொதுஜன பெரமுன கட்சியினருடைய பெரும்பான்மை ஆதரவிலேயே ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் புதிய அரசாங்கத்தை ஜனாதிபதி கோத்தாபாய ராஜபக்ஷ உருவாக்கி இருக்கின்றார். ஆனாலும் போராட்டத்தில் குதித்துள்ள மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றும் வகையில் சர்வகட்சிப் பிரதிநிதித்துவத்தைக் கொண்ட இடைக்கால அரசாங்கமே உருவாக்கப்பட்டிருக்கின்ற என்ற போலிப் பிரசாரமும் அரச தரப்பினரால் முன்னெடுககப்பட்டிருப்பதைக் காண முடிகின்றது.

நாடு எதிர்கொண்டுள்ள மிக மோசமான பொருளாதார நெருக்கடியினால், அனைத்து அபிவிருத்திச் செயற்பாடுகளும் நிறுத்தப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது. அதேவேளை, வீண் விரயங்களைத் தவிர்த்து, கையிருப்பில உள்ள ஒவ்வொரு டொலரையும் – ஒவ்வொரு ரூபாவையும் மிகவும் பயனுள்ள வகையில் பயன்படுத்த வேண்டிய நிலைமைக்கு அரசாங்கம் ஆளாகியிருக்கின்றது. ஆனால் நாட்டின் இந்தத் தீவிர நிலைமையைக் கருத்திற்கொண்டு ஆட்சியாளர்கள் செயற்படுவதாகத் தெரியவில்லை.

கட்சி அரசியல் நலன்களிலும், தமது அதிகார அரசியல் நலன்களிலுமே அவர்கள் தீவிர கவனம் செலுத்திச் செயற்பட்டு வருவதைக் காண முடிகின்றது. நெருக்கடி நிலைமைகளை சீராக முகாடிமைத்துவம் செய்து பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான முயற்சிகளில் கருத்தொருமித்துச் செயற்பட வேண்டிய ஆட்சியாளர்கள் அரசியல் நலன்களை முதன்மைப்படுத்திய வகையிலேயே செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

இனவாத, மதவாத, அதிகார மோகம் கொண்ட ராஜபக்ஷக்களின் தலைமையிலான அரச தரப்பினர் சிறுபான்மை இன மதத்தவர்களை அடக்கியொடுக்குகின்ற போக்கிலான நடவடிக்கைகளை இந்த நெருக்கடியான காலத்திலும் கைவிடவில்லை. சிறுபான்மை தேசிய இனத்தவராகிய தமிழ் மக்களின் பாரம்பரிய வணக்கத் தலங்களை தொல்பொருள் அகழ்வாராய்ச்சி என்ற பெயரில் கைப்பற்றி, தொல்பொருள் திணைக்களத்தினரும், இராணுவத்தினரும் இணைந்து பௌத்த பிக்குகளின் அனுசரணையுடன் ஆக்கிரமிக்கின்ற தொடர் நடவடிக்கையை எந்தவிதத் தயக்கமுமின்றி முன்னெடுக்க முனைந்திருக்கின்றனர்.

இவ்வாறு ஆக்கிரமிக்கப்படுகின்ற வணக்கத்தலங்களைச் சூழவுள்ள தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசக் காணிகளையும் அவர்கள் புராதன பௌத்த மத உரிமை கோரக்கையின் மூலம் கையகப்படுத்துவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கின்றனர். இந்த வகையிலேயே முல்லைத்தீவு மாவட்டம் குருந்தூர் மலையில் நீதிமன்றத்தின் தடை உத்தரவுக்குப் பின்னரும் அத்துமீறிய நிலையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள பௌத்த விகாரைக் கட்;டிடத்தில் புத்தர் சிலையொன்றைப் பிரதிஷ்டை செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. இந்த நடவடிக்கைகளில் நூற்றுக்கணக்கான பௌத்த பிக்குகள் பௌத்தாலோக நற்பணி மன்றத்தின் ஊடாக தென்னிலங்கையைச் சேர்ந்த பௌத்த மதச் சார்பிலான சிவில் சமூகத்தினரும் பௌத்த மதத்தினரும் இணைந்து செயற்பட்டிருந்தனர்.

புத்த சாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவின் தலைமையில் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இந்த நிகழ்வுக்காக சிவிலுடையிலான முப்படையினரும், பெருந்திரளான பௌத்த பிக்குகளும், பெருமளவிலான பௌத்த சிங்கள மக்களும் குருந்தூர்மலைக்கு வருகை தந்திருந்தனர். இவர்கள் பல சொகுசு வாகனங்கள் உட்பட பெருமளவிலான வாகனங்களில் குருந்தூர்மலைக்குப் பயணம் செய்திருந்தனர். பெரும் எண்ணிக்கையிலான பொலிசாரும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

## சினம் கொள்ளச் செய்திருக்கின்றனர்

எரிகின்ற நெருப்பில் எண்ணெய் ஊற்றுவதைப் போன்று, பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கின்ற வடபகுதி மக்களின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்ளும் வகையில் இடம்பெறவிருந்த இந்த நிகழ்வை ஊர் மக்களும் பிறரும் கடுமையாக



எதிர்த்திருந்தனர். நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வராஜா கஜேந்திரன், வினோநோகராதலிங்கம் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர்களான து.ரவிகரன், க.சிவநேசன் மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், சமூக முக்கியஸ்தர்கள் என பலரும் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்ட நடவடிக்கையில் பங்கேற்றிருந்தனர்.

தமிழ் மக்களின் இந்த எதிர்ப்பினால் கோபம் கொண்ட பொலிசார் எதிர்ப்பு தெரிவிப்பதற்காக அங்கு குழுமி இருந்தவர்களில் மூவரைத் தாக்கிய பின்னர் கைது செய்திருந்தனர். எனினும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களின் கடும் எதிர்ப்பையடுத்து, அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கடும் ஆட்சேபணை என்பவற்றையடுத்து, புத்தர் சிலையைப் பிரதிஷ்டை செய்யும் முயற்சி கைவிடப்பட்டது, அந்த நிகழ்வுக்காக வருகை தந்திருந்தவர்களும் திரும்பிச் சென்றனர்.

குருந்தூர்மலை விவகாரம் குறித்து முல்லைத்தீவு நீதிமன்றத்தில் இட்பெற்ற வழக்கில் அந்த ஆலயப் பகுதியில் புதிய கட்டிடங்கள் எதனையும் எந்தத் தரப்பினரும் நிர்மாணிக்கக் கூடாது என நீதவான் உத்தரவிட்டிருந்தார். ஆனால் இந்த நீதிமன்ற உத்தரவு புறக்கணிக்கப்பட்ட நிலையிலேயே குருந்தூர்மலையில் பௌத்த விகாரைக்கான புதிய கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டு, புத்தர் சிலையொன்றைப் பிரதிஷ்டை செய்வதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டிருந்தன. நீதிமன்ற உத்தரவை மீறியதன் மூலம் நீதிமன்றத்தை அவமதித்ததாகக் கருதக் கூடிய இந்த நடவடிக்கை நாட்டின் பௌத்த சாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரின் அனுசரணையில் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. இது இந்த நாட்டின் இனவாத மதவெறிப் போக்கை வெளிச்சம் போட்டு காட்டியிருக்கின்றது.

இந்த நிகழ்வுக்காகப் பெருமளவு நிதி செலவிடப்பட்டிருந்தது. இதில் புத்த சாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, தொல்பொருள் திணைக்களம், பாதுகாப்பு அமைச்சின் கீழான இராணுவம் உள்ளிட்ட அரச அமைப்புக்கள் பெரும் பங்கேற்றிருந்ததையொட்டி, இந்த நிதிச் செலவுக்கான பங்களிப்பும் அரச தரப்பில் இருந்து நிச்சயமாக ஒதுக்கப்பட்டிருக்கும் என்பதில் எந்த வித சந்தேகமுமில்லை.

அதேவேளை இந்த நிகழ்வின் விசேட வழிபாடுகளில் கலந்து கொள்வதற்காக தென்னிலங்கையில் இருந்து நீண்ட பயணம் மேற்கொண்டவர்களுக்கான வாகனச் செலவு, எரிபொருளுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்ற நிலையில் அந்த வாகனங்களுக்கான எரிபொருள் என்பவற்றுக்குப் பெரும் தொகைப் பணம் செலவாகியிருக்கும். நாட்டில் நிதி நெருக்கடி நிலவுகின்ற வேளையில் இதற்கான நிதி செலவிடப்பட வேண்டியதன் அவசியம் என்ன? எந்த வகையில் அந்த நிகழ்வு இன்றைய சூழலில் முக்கியத்துவம் பெற்றது? – இந்தக் கேள்விகள் சாதாரண மக்கள் மனங்களில் எழுகின்றன. இந்தக் கேள்விகளுக்குப் பதில் கிடைக்கும் என்பதற்குப் பதிலாக அந்தக் கேள்விகளை எழுப்பிய நிலைமைகளுக்குக் காரணமானவர்கள் அவர்களை சினம் கொள்ளச் செய்திருக்கின்றார்கள் என்றே கூற வேண்டும்.

தமிழ் மக்களின் எதிர்ப்புப் போராட்டத்தையடுத்து குருந்தூர் மலையில் புத்தர் சிலையைப் பிரதிஷ்டை செய்யும் நடவடிக்கை தற்காலிகமாகவே கைவிடப்பட்டிருக்கின்றது. இது நிரந்தரமான முடிவல்ல. மீண்டும் ஒரு பௌர்ணமி தினத்தில் அந்த புத்தர் சிலையை நிறுவுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதில் சந்தேகமில்லை. குருந்தூர்மலை விவகாரம் குறித்து உயர் நீதிமன்றமும் கவனம் செலுத்தியிருக்கின்ற போதிலும், அரசியல் தலையீடின்றி செயற்பட வேண்டிய நீதிப்பொறிமுறையைத் தமது அரசியல் நலன்களுக்காக வளைத்துப் போடுகின்ற ராஜபக்ஷக்களின் தில்லுமுல்லுச் செயற்பாடு இந்த விடயத்தில் தனது கைவரிசையைக் காட்டவே செய்யும் என்பதில் எந்தவிதச் சந்தேகமும் இல்லை.






# தந்தையர் தினம் வந்தது எப்படி?

**தந்தையர்** தினம் என்பது தந்தையர்களைக் கௌரவிப்பதற்காக கொண்டாப்படும் ஒரு நாளாகும். உலகின் பல்வேறு நாடுகளில் ஜூன் மாதத்தின் மூன்றாவது ஞாயிற்றுக் கிழமையிலும் வேறுபகுதிகளில் பிற நாட்க ளிலிலும் இந்தத் தினம் கொண்டாடப்படுகிறது.

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் அன்னையர் தினத்தை முழுமைப்படுத்த தந்தை ஸ்தானம் மற்றும் தந்தையைக் கொண்டாடுவதற்காக தந்தையர் தினம் என்ற கொண்டாட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. மேலும் தந்தையர் மற்றும் முன்னோர்களின் நினைவுவிழாவாகவும் இந்த நாளில் கொண்டாடப்பட்டு கௌரவிக்கப்படுகிறது. உலகளவில் தந்தையர் தினம் பல்வேறு திகதிகளில் கொண்டாப்படுகிறது. மேலும் இந்த நாளில் தந்தையருக்கு பரிசுகளைக் கொடுப்பது, சிறந்த இரவு விருந்து அளிப்பது மற்றும் குடும்ப உறவுகள் செயல்பாடுகளில் ஈடுபடுவது போன்றவை மேற்கொள்ளப்படும்.

ஸ்போகேனில் சோனோரா டோடின் முயற்சியால் ஜூன் 19, 1910 அன்று முதல் தந்தையர் தினம் அனுசரிக்கப்பட்டதாக நம்பப்படுகிறது.

மேலும் முதல் நவீன 'தந்தையர் தின' கொண்டாட்டமானது ஜூலை 5, 1908 அன்று மேற்கு






வெர்ஜினியாவில் உள்ள பேர்மோண்ட்டில் மத்திய யுனைட்டட் மெத்தொடிஸ்ட் தேவாலயம் என இப்போது அறியப்படும் வில்லியம்ஸ் நினைவு மெத்தொடிஸ்ட் எபிஸ்கோபல் தெற்கு தேவாலயத்தில் கடைப்பிடிக்கப்பட்டது எனும் வரலாறும் உண்டு. ஒவ்வொரு நாடுகளிலும் தந்தையர் தினம் எவ்வாறு கொண்டாடப்படுகிறது என்று பார்ப்போம் அந்த வகையில்

அர்ஜென்டினாவில் தந்தையர் தினம் ஜூன் மாதத்தின் மூன்றாவது ஞாயிற்றுக் கிழமை கொண்டாடப்படுகிறது. ஆனால் ஜோஸ் டே சன் மார்டின் அந்த நாட்டின் 'தேசியத் தந்தையாக' கருதப்பட்டு தந்தையர் தினத்தை ஆகஸ்ட் 24 ஆம் தேதி அவரது நினைவு விழாவாக மாற்றிக் கொண்டாட பல்வேறு முயற்சிகள் நடந்துள்ளது.

அவுஸ்திரேலியாவில் தந்தையர் தினமானது செப்டம்பர் மாதத்தின் முதல் ஞாயிற்றுக் கிழமை கொண்டாடப்படுகிறது ஆனால் இங்கு இது அரசு விடுமுறை தினம் அல்ல.



சோபிகா கிருஷ்ணமூர்த்தி

ஜேர்மனியில் தந்தையர் தினம் உலகத்தின் மற்ற பகுதிகளைப் போல் அல்லாமல் வேறு விதமாகக் கொண்டாடப்படுகிறது.

ஜேர்மனியின் சில பகுதிகளில் தந்தையர் தினத்தை ஒப்பிடும் படியான இந்த நாளை 'வேட்டர்டக்' என அழைக்கின்றனர்.

நியூசிலாந்தில், தந்தையர் தினமானது செப்டம்பர் மாதத்தின் முதல் ஞாயிற்றுக் கிழமையில் கொண்டாடப்படுகிறது ஆனால் இங்கு இது அரசு விடுமுறை தினம் அல்ல.

பிலிப்பைன்ஸில் தந்தையர் தினமானது ஒரு அதிகார்வப்பூர்வ விடுமுறை அல்ல. ஆனால் ஜூன் மாதத்தின் 3வது ஞாயிற்றுக் கிழமை இந்தத் தினம் பரவலாகக் கொண்டாடப்படுகிறது. 1960கள் மற்றும் 1970களில் பிறந்த பெரும்பாலான பிலிப்பைன் மக்கள் தந்தையர் தினத்தை கொண்டாடவில்லை.

> **"முதுமைக்காலத்தில் தந்தையின் செயற்பாடுகள் முடக்கப்பட்டு உடலும், உள்ளமும் உறவுகளுடன் உரையாட, பாசத்தில் நனைய நினைக்கும்போது அவற்றை அவர்களுக்கு வழங்கி இருக்கிறோமா? தள்ளாத வயதில் அவர்களுக்குரிய அனைத்து கடமைகளையும் செய்கிறோமா? என்ற கேள்வியை நம்முன்னே கேட்டு பார்த்து நமது தவறுகளை சரிசெய்வதே இன்றைய நாளின் முதற் பணியாகும். அதுவே அவர்களுக்கு நாம் ஆற்றும் கடமையாக இருக்க முடியும்."**

13 ஆம் பக்கம் பார்க்க...

# தந்தையர் தினம் வந்தது எப்படி?



ஆனால் அமெரிக்காவைப் பற்றி தொலைக்காட்சியில் பார்த்தறிந்து அந்தத் தாக்கத்தினால் பிலிப்பைன் மக்கள் அமெரிக்காவின் பாரம்பரியத்தை பின்பற்ற மிகவும் விரும்பினர். மேலும் இதைப் போன்ற பிற அமெரிக்க விடுமுறைகளையும் இவர்கள் பின்பற்றுகின்றனர். இணையத்தின் வருகையும் பிலிப்பைன் மக்களுக்கு இந்த விடுமுறைகளின் மேல் ஆர்வத்தை ஏற்படுத்த உதவியாக இருந்தது.

ரோமன் கத்தோலிக்க பாரம்பரியத்தில் செயின்ட் ஜோசப் தினத்தில் தந்தையர் தினம் கொண்டாடப்படுகிறது. மார்ச் 19 அன்று வழக்கமாக இது செயிண்ட் ஜோசப் விருந்து என அழைக்கப்படுகிறது. எனினும் குறிப்பிட்ட நாடுகளில் தந்தையர் தினமானது மதச்சார்பற்ற கொண்டாட்டமாக உள்ளது.

சிங்கப்பூரில் தந்தையர் தினமானது ஜூன் மாதத்தின் மூன்றாவது ஞாயிற்றுக் கிழமையில் கொண்டாடப்படுகிறது ஆனால் இங்கு இது அரசு விடுமுறை தினம் அல்ல.

தைவானில் தந்தையர் தினம் ஒரு அதிகாரப்பூர்வ விடுமுறை தினம்







அல்லது ஆண்டின் எட்டாவது மாதத்தின் எட்டாவது நாளான ஆகஸ்ட் 8 இல் இந்தத் தினம் பரவலாக அனுசரிக்கப்படுகிறது. மண்டரைன் சைனிஸில் எண் 8 ஆனது பா என உச்சரிக்கப்படுகிறது. 'பாபா' அல்லது 'தந்தை' என்ற அர்த்ததில் இந்த உச்சரிப்பு 'பா' என்ற எழுத்தை மிகவும் ஒத்துள்ளது. அதனால் தாய்வானியர்கள் ஆகஸ்ட் 8 ஐ அதன் செல்லப்பெயரில் 'பாபா தினம்' என வழக்கமாக அழைக்கின்றனர்.

அமெரிக்காவில் தந்தையர் தினமானது ஜூன் மாதத்தின் மூன்றாவது ஞாயிற்றுக் கிழமை கொண்டாடப்படுகிறது. ஜூன் 19, 1910 அன்று வாஷிங்டனில் உள்ள ஸ்போக்கனில் இதன் முதல் கொண்டாட்டம் தொடங்கியது. தந்தையர்களைக் கௌரவப்படுத்துவதற்கான பிற கொண்டாட்டங்கள் பேர்மோண்ட் மற்றும் கிரெஸ்டனில் கடைபிடிக்கப்பட்டது. ஆனால் இந்த நவீன விடுமுறை இந்த இரண்டிலும் இருந்து கடைப்பிடிக்கப்பட்டது அல்ல.

வாஷிங்டனில் உள்ள கிரெஸ்டனில் பிறந்த சொனொரா ஸ்மார் டோடினால் இந்த நவீன தந்தையர் தினம் கண்டுபிடிக்கப்பட்டது. இதை நிறுவுவதற்கு இவரே இயக்கு சக்தியாக இதற்குப் பின்னால் இருந்தார். அவருடைய அப்பாவான உள்நாட்டுப் போரில் அனுபவமுள்ள வில்லியம் ஜாக்சன் ஸ்மார்ட், வாஷிங்டனில் உள்ள ஸ்போக்கனில் தனி மனிதராக அவரது ஆறு குழந்தைகளையும் வளர்த்துள்ளார் அன்னையர் தினத்தை நிறுவுவதற்கு உழைத்த அன்னா ஜர்விஸால் இவர் ஊக்கமூட்டப்பட்டார். எனினும் தொடக்கத்தில் அவரது அப்பாவின் பிறந்த நாளான ஜூன் 5 ஆம் திகதியையே அறிவுறுத்தினார். இவர் நிறுவனர்களுக்கு ஏற்பாடுகளைச் செய்ய தகுந்த காலம் தராததால் இந்தக் கொண்டாட்டம் ஜூன் மாதத்தின் மூன்றாவது ஞாயிற்றுக் கிழமைக்கு தள்ளி வைக்கப்பட்டது. ஜூன் 19, 1910 அன்று வாஷிங்டனில் உள்ள ஸ்போக்கனின் ஸ்போக்கன் YMCAவில் முதல்



தந்தையர் தினம் கொண்டாடப்பட்டது.

இவ்வாறு பல்வேறு நாடுகளில் பல்வேறு விதமாக தந்தையர் தினம் கொண்டாடப்படுகிறது. தந்தையர் தினம் என்ற அந்த நாள் உணர்வுபூர்வமான, அர்த்தபூர்வமான ஒரு நாள் என்பதனை எவரும் மறுக்க முடியாது. குழந்தைகளுக்கு ஆரோக்கியத்தை அளிக்கும் பொறுப்பு எப்படி தாய்க்கு இருக்கிறதோ, அதேபோல் குழந்தைகளின் முன்னேற்றத்திலும், பாதுகாப்பிலும் தந்தையின் பங்களிப்பு மிக முக்கியமானதாக இருக்கிறது. குடும்பத்திற்காக மாடாய் உழைத்து ஓடாய் தேய்வதுடன், கனிவான கண்டிப்பையும், மறைமுகமான பாசத்தையும் வெளிப்படுத்தும் தந்தையிடம் குழந்தைகளுக்கும் பாசம் எப்போதும் குறைந்து போய்விடுவதில்லை.

முதுமைக்காலத்தில் தந்தையின் செயற்பாடுகள் முடக்கப்பட்டு உடலும், உள்ளமும் உறவுகளுடன் உரையாட, பாசத்தில் நனைய நினைக்கும்போது அவற்றை அவர்களுக்கு வழங்கி இருக்கிறோமா? தள்ளாத வயதில் அவர்களுக்குரிய அனைத்து கடமைகளையும் செய்கிறோமா? என்ற கேள்வியை நம்முன்னே கேட்டு பார்த்து நமது தவறுகளை சரிசெய்வதே இன்றைய நாளின் முதற் பணியாகும். அதுவே அவர்களுக்கு நாம் ஆற்றும் கடமையாக இருக்க முடியும். இந்த நன்னாளில் அவர்களுக்கு பரிசுகள் வழங்குவதை விடவும், விருந்து உபசரிப்புகளை செய்வதை விடவும், அனைத்து விஷயங்களுக்கும் அவர்களுடைய ஆலோசனைகளை கேட்பதுடன், அவர்களுடைய வார்த்தைகளுக்கு

எப்போதும் மதிப்பளித்து அவர்கள் வழி நடப்போம் என்று இன்றைய தினத்தில் நாம் அனைவரும் உறுதிமொழி ஏற்போம். அதேபோல் மறைந்த தந்தையின் உருவப்படத்திற்கு மலர் மாலை அணிவித்து அவர்களின் நினைவை போற்றலாம்.

அவர்களுடைய மனப்பூர்வமான ஆசி கிடைத்து வாழ்க்கையில் மென்மேலும் வளர முடியும். குடும்பத்தின் வளர்ச்சிக்காக தன்னையே மெழுகுவர்த்தியாய் அர்ப்பணித்த தந்தையர்களுக்கும் அன்பு நிறைந்த தந்தையர் தின வாழ்த்துகள்.

தெய்வங்கள் எல்லாம் தோற்றே போகும் தந்தை அன்பின் முன்னே!





தமிழ்

# 'அப்பா' எனும் வெள்ளித்திரை அவதாரம்!

## சமுத்திரக்கனியின் இன்னுமொரு முத்து!

**சினிமாவும்** வாழ்க்கையும் ஒன்றாகிவிடுமா? என்ற சர்ச்சை இன்று சினிமா பற்றிய விமர்சனங்களின் அடிநாதமாக விளங்குகின்றது. பல கற்பனைகள் கலந்து தலைவனை (கதாநாயகனை) வீரனாக, பண்புள்ளவனாகவும் தலைவியை (கதாநாயகியை) அழகாகவாளாக, மற்ற பெண்களில் இருந்து வேறுபடுபவளாக தமிழ் சினிமாக்கள் காட்டத் தவறவில்லை.



யதார்த்த வாழ்விற்கு அப்பால் சென்று கதாநாயகனையும் கதாநாயகியையும் பிரபலப்படுத்த, ரசிகர் மத்தியல் திரைப்படங்களுக்காக மதிப்பைப் பெற திரையுலகு கற்பனைகளைப் புகுத்திக்கொள்ளும் காலகட்டத்தில் சமுத்திரக்கனியின் பல தமிழ் திரைப்படங்கள் யதார்த்த வாழ்வில் பலர் கண்டும் காணாமலும் கடந்து போகும் அழுக்குகளை, சீர்திருத்த வேண்டிய மனித மனங்ளை திரை விளக்கி திரைப்படங்களாக காட்சிபடுத்தியுள்ளது. அந்த வகையில் 2016 இல் வெளியான இவரது அப்பா திரைப்படம் அனைவர் மனதிலும் இடம்பிடித்ததோடு பல அப்பாக்களைச் சிந்திக்க வைத்த படமாகும் வெற்றிபெற்றிருந்தது.

சமுத்திரக்கனி, தம்பி ரமேஸ், நமோ நாராயணா ஆகிய மூன்று அப்பாக்களின் சிந்தனைகள், நடத்தைகள், அவர்கள் பிள்ளைகள் மீது




வெளிப்படுத்தும் அன்பு, கல்வி முறைமை, எதிர்பார்ப்பு ஆகியன வெவ்வேறு கோணத்தில் இத்திரைப்படத்தில் காட்சிபடுத்தப்பட்டுள்ளது. படத்தின் ஆரம்பமே சமுத்திரக்கனியும் தம்பி ரமேசும் தந்தையாகும் செய்தியை கதையம்சத்தில் வடித்துள்ளதோடு குழந்தை வயிற்றில் உருவாகி அதன் பிரசவம், வளர்ச்சி, பாடசாலை கல்வி, பெற்றோர்கள் பிள்ளைகளை வழிநடத்தும் முறை என விரிந்து செல்கிறது.

ஒரு பிள்ளை பிறந்து தான் என்னவாக வர வேண்டும் என்பதை அந்தப் பிள்ளை தீர்மானிக்க வேண்டும் என்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். இதன்போதே அந்தப் பிள்ளையின் ஆளுமை விருத்தியடைந்து சமூகத்தில் தன்னையொரு சிற்பியாக, கல்லாக தானே செதுக்கி அறிவுடையவனாக புத்தியுடையவனாக வரமுடியும்.

இதனை உணர்ந்த சமுத்திரக்கனி தனது மகனின் உள்ளே பொதிந்து கிடக்கும் திறமைகளை வெளிக்கொண்டு வருவதிலும் அவனை சுதந்திர பறவையாக பறக்கவிட்டு அவனோடு ஒரு தோழனாக பயணிப்பதையும் முதன்மையாக கொண்டு இயங்குவதோடு மகனின் தோழன் – தோழியர்களுக்கும் குருவாக, தந்தையாக வழிகாட்டுகின்றார். இதற்கு எதிர்மாறான சுபாவம் கொண்ட தம்பி ரமேஸ் (படத்தில் சிங்கப் பெருமாள்) தனது மகனை கருவில் இருந்தே இப்படிதான் வளர்க்கவேண்டும் என்று மனைவிக்கு பல நெருக்கடிகளை கொடுத்து தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கிறார்.

இவரது மகனை இருபத்து நான்கு மணிநேரமும் படிக்கவைத்தல், நண்பர்களோடு விளையாட விடாமை, அந்தப் பிள்ளையின் உள்ளத்து உணர்வுகளையோ, ஏக்கங்களையோ புரிந்து கொள்ளாமல் தான்தோன்றித்தனமாக செயற்படுகின்றார்.

இதனை அவதானித்த இவரது பக்கத்து வீட்டில் வசிக்கும் சமுத்திரக்கனி பலமுறை இவருக்கு புத்திமதி சொல்லி நல்ல தந்தை எப்படி இருக்க வேண்டும் என அறிவுரை வழங்கச் சென்று அது இருவருக்குமிடையில் பிரச்சினையாக முடிகின்றது. இறுதியில் சிங்கப்பெருமாள் மகனை அழைத்து அந்த இடத்தைவிட்டு வேறு இடம் மாறுகின்றார். தனது மகனுக்கு கல்வி மட்டும் இருந்தால்போதும் என்ற சிங்கப்பெருமாளின் முட்டாள்தனமான எண்ணம் அவரது மகனை



விடுதியொன்றில் சேர்க்க வைத்து அங்குள்ள விடுதிகாப்பாளர்களின் தண்டனைகளுக்கு ஆளாக்க வைத்து அந்தப் பிள்ளையை தற்கொலை செய்யும் அளவிற்கு தூண்டி, இறுதியில் உயிரை பறித்து விடுகின்றது.

சமுத்திரக்கனியின் மகன் தன் தந்தையின் வளர்ப்பினால் கல்வியிலும் தான் விரும்பிய துறையிலும் வெற்றிக்கண்டு வளர்ந்து வருகின்றான். இந்தத் திரைப்படத்தில் வரும் மயில்வாகனம்




என்ற சிறுவன் வளர்ச்சி குன்றிய ஒருவனாகவும் தன் வீட்டில் தந்தை, அக்கா ஆகியோரால் புறக்கணிக்கப்படுகின்றவனாகவும் காட்டப்படுகின்றான். இவனது தந்தை நெடுநிலியன் இவனைப் பார்த்து இருக்கும் இடம் தெரியாமல் இருந்து போகவேண்டும் என்று வளர்க்கின்றான். இந்தச் சிறுவனுக்கு பாடங்களில் கற்று தேர்ச்சியடையும் அறிவு இல்லையென்றாலும் கவிதை எழுதும் ஆற்றல் இருப்பதை சமுத்திரக்கனி அறிந்து அவனது கவிதைகளை அவனது பெற்றோரும் அவனைச் சார்ந்த சமூக உறுப்பினர்களும் அறியும் வண்ணம் செய்கிறார். சிறந்த தந்தை கதாப் பாத்திரமாகவும் மிளிர்கின்றார்.

இந்தப்படத்தின் கதாபாத்திரங்கள், காட்சியமைப்புகள், கதையம்சம் ஆகிய அனைத்தும் சமூகத்தின் ஒவ்வொரு மறைவிற்குள்ளும் புதைந்து கிடக்கும் சிந்தனையற்ற சீரழிவுகளை எடுத்துக்காட்டுகின்றது. எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே. அது நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே என்ற அஸ்திவார வார்த்தைகள் இந்தத் திரைப்பிடத்தில் உடைக்கப்பட்டு ஒரு பிள்ளையின் வளர்ப்பில் சிந்தனை தெளிவுடைய தந்தையின் பங்களிப்பும் அவசியமாகின்றது என்ற கருத்தும் முன்வைக்கப்படுகின்றது.

தமிழ் சினிமாவின் வித்தியாசமான கோணங்களில் சமுத்திரக்கனியின் பல படங்கள் பாடங்களாக இந்தச் சமுகத்திற்கு கற்பிக்கப்படுவதோடு தந்தையர் தினத்தில் பல தந்தையர்கள் இந்தத் திரைப்படத்தைப் பார்ப்பதன் மூலம் தன் பிள்ளை பற்றி தாங்கள் கற்றுக்கொள்ளாத பல பக்கங்களைத் தெரிந்து கொள்ளலாம்.

# களச்சுற்றுலா கண்ணைக்கட்டுதே!

கருத்துக்களம்

## அடடா இதுவா பிக்னிக் போகும் நேரம்?



ஜேம்ஸ் ஞானேந்திரன்

**வீடு** பற்றி எரியும் போது, அந்த நெருப்பில் பீடி பற்ற வைத்து ஒரு தம் பிடிக்கலாம் என்று நினைக்கின்ற கதையாக அல்லவோ இது இருக்கின்றது?

பேயாட்டம் போட்ட கொரோனாவின் அழுங்குப் பிடி முற்றாக நீங்கவில்லை.

நாட்டின் போக்குவரத்து ஸ்தம்பித்து போய் நிற்கின்றது. நீளமான பாம்பைப் போல கியூவரிசைகள் எரிபொருளுக்காக நீள்கின்றன.

சீனி, அரிசி , மா விலைகள் ஒன்றுடன் ஒன்று அடிபட்டுக் கொண்டு, நாளொரு சதமும் பொழுதொரு ரூபாயுமாக உயர்கின்றன.

இவை மட்டுமா ? வெளியில் ஒரு கப் பால் டீ அருந்த , சுளையாக ஒரு 100 ரூபாய் தாள் தேவை! பிக்னிக் எப்து உச்சாசமாகச் பொழுதைக் கழிக்க திட்டமிடப்படும் பயணம். ஆட்டமும் பாட்டமும், குடியும் கூத்தும் , பிட்ஸாவும் ஹம்பேர்கரும் என்று களைகட்டுவது பிக்னிக் பொழுதுகள்.

ஒரு சுற்றுலாவிற்கு அறவே பொருத்தமில்லாத பொழுது இது . அந்த நினைப்பே இப்பொழுது வேண்டாமே.




## எம்மை ஆசுவாசப்படுத்துகிறது

**சுற்றுலா** என்பது ஓர் மன மகிழ்வினை ஏற்படுத்தும் முக்கியமான செயற்பாடுகளில் ஒன்றாகும். மனிதர்கள் ஓய்வற்று ஓடிக் கொண்டிருக்கின்றோம். ஒவ்வொருவருக்கும் ஒவ்வோர் குறிக்கோள் உண்டு. அவரவர் ஆறுதல் தேடி ஆசுவாசம் அடைவது விடுமுறைகளிலும் சுற்றுலாக்களிலுமே எனக் கூறலாம். மக்கள் தொடர் வரிசையில் மண்ணெண்ணைக்கும் பெற்றோலுக்கும் அல்லாடும் இச்சமயத்தில் சுற்றுலா அவசியமா என சிலர் வினவலாம். சுற்றுலா எக்காலத்திலும் அவசியமானதொன்றே ஆகும். நண்பர்கள் மற்றும் குடும்பங்கள் இணைந்து செல்லும் சுற்றுலா ஓர் கொண்டாட்ட மனநிலையைத் தரும். இப்போதைய பொருளாதார நெருக்கடியான காலப்பகுதியில் நெடுந்தூரமான பயணங்களைத் தவிர்த்து அருகாமையில் உள்ள இடத்தினை தெரிவு செய்யலாம். இயற்கையை இரசித்து ஓய்வாக கால்கள் நீட்டி புல்வெளியில் அமர்ந்து நிலவினை பார்த்து கவிதை வளர்க்க சுற்றுலாக்கள் தான் ஒத்தாசை புரிகின்றது.



சுவர்ணலதா

## தினமும் தெருவில் சுற்றுலா...



சசிகரன் கிருபா
மல்லாகம்

**இன்றைய** சூழலில் தினமும் சுற்றுலா தானே செல்கிறோம். அதிகாலை உலர்உணவுப்பொதிகள்,தண்ணீர்போத்தல்களுடன் தயாராகி பயணத்தை தொடக்கினால்,நள்ளிரவே வீடு வருவோம்.ஆனால் நாங்கள் சுற்றுலா செல்லுமிடம் தான் புதியது.. எரிபொருள்நிரப்பு நிலையங்களிற்கும், எரிவாயுவிற்காக கடைகளிற்கும், உணவுப்பொதிகளுக்காக கூட்டுறவு சங்கங்களிற்கும். எப்போது தான் தினம் செல்லும் சுற்றுலாப்பயணம் முடிவடையுமோ தெரியவில்லை.

## அரசனும் ஆண்டியாகத்தான் வெளியே வரும் நிலை



(குகதா)
டக்ஸனா
கிருஷ்ணானந்தன்

**சமகால** இலங்கை நிலவரம் சற்று கடினமான வாழ்வியலையே மக்களுக்கு வழங்குகின்றது என்பது தெட்டத் தெளிவான உண்மை அதாவது அடுத்த கட்ட உணவிற்கே பாரிய சிரமத்தை எதிர்நோக்குகின்றனர் ஏனெனில் பணவீக்கம் அதிகரித்து அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாடும் நிலவுகின்றது இந் நிலையில் picknik ஒன்றினைத் திட்டமிடும் போது செலவுகள் இரட்டிப்பாவதுடன் இன்று ஓர் உணவகத்தினுள் சென்றால் அரசனும் ஆண்டியாகத்தான் வெளியே வரும் நிலை இவ்வாறான அசாதாரண விலையுயர்வுகளால்த் திண்டாடும் நிலையில் picnic ற்கு திட்டமிடுவதை சற்றுத் தள்ளி வைப்பது நலம் என்பது எனது கருத்து .

04 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## குருந்தூர் மலை விவகாரம்....

தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாக ஒரு பகுதி அடையாளம் காணப்பட்டால் அப்பகுதியை பாதுகாப்பதற்கும் ஆய்வுகளை முன்னெடுப்பதற்கும்தான் தொல்பொருள் திணைக்களம் நடவடிக்கை எடுக்கும். புதிய நிர்மாணங்களை அங்கு மேற்கொள்ள முடியாது என்பதுதான் தொல்பொருள் திணைக்களத்தின் விதி முறை. ஆனால், நடைமுறையில் சிங்கள மயமாக்கலை முன்னெடுப்பதற்கான செயற்பாடுகளை தீவிரப்படுத்துவதற்கும், அதனை நியாயப்படுத்துவதற்குமான ஒரு கருவியாக மட்டுமே தொல்பொருள் திணைக்களம் செயற்படுகின்றது.

அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கதான் இந்தப்பகுதிக்குச் சென்று இந்த பௌத்த விகாரை அமைக்கும் பணிகளுக்குப் பின்புலமாக இருந்தவர். ‘தொல்பொருள் ஆய்வுப் பணிகளே இங்கு முன்னெடுக்கப்படும். ஆக்கிரமிப்பு அல்ல’ என தமிழத் தரப்புக்கு சமாதானம் கூறியிருந்தார். ஆனால், இவ்வருட ஆரம்பத்திலிருந்து இராணுவத்தின் முழுமையான பாதுகாப்புடன் விகாரைக்கான கட்டுமானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. ஆய்வுப்பணிகளும் முன்னெடுக்கப்பட்டதாகத் தெரிவித்த தொல்பொருள் திணைக்களம் அனுராதபுர காலத்துக்குரிய சின்னங்கள் சில இங்கு கண்டெடுக்கப்பட்டதாகத் தெரிவித்திருந்தது. இந்த ஆய்வுகளின் போது கண்டெடுக்கப்பட்ட சின்னங்கள் தொடர்பாகவோ அவற்றின் வரலாற்று விளக்கங்கள் தொடர்பாகவோ வெளிப்படைத்தன்மையாக எதுவும் நடைபெறவில்லை. தமக்கேற்றவகையிலான பெறுபேறுகளைத்தான் தொல்பொருள் திணைக்களம் வெளியிட்டது. இது தொடர்பில் முரண்பாடான கருத்துக்களை தமிழ் ஆய்வறிஞர்கள் சிலர் முன்வைத்த போதிலும் அவை கவனத்திற்கொள்ளப்படவில்லை.

இருந்தபோதிலும் வரலாற்றுத் தகவல்களின்படி 12 ஆம் நூற்றாண்டுப் பகுதியில் தமிழர்களும் பௌத்த மதத்தைப் பின்பற்றியிருக்கின்றார்கள். இதனை சிங்கள அறிஞர்கள் பலரும் முன்னர் ஏற்றிருந்தார்கள். ஆனால், இப்போது அவர்கள் அதனை மறைக்க முற்படுகின்றார்கள். வடக்கில் இருக்கக் கூடிய பௌத்த சின்னங்களை பயன்படுத்தி அந்தப் பகுதியை சிங்கள மயமாக்குவதை அவர்கள் தமது நிகழ்சித் திட்டமாக மாற்றியமைத்திருப்பதால் தமிழ் பௌத்தர்கள் இருந்தார்கள் என்பதை அவர்கள் மறைக்கின்றார்கள்.

சிங்கள – பாளி இலக்கியங்கள் சில இந்த குருந்தூர் மலை தொடர்பாக சில தகவல்களை வெளியிட்டிருப்பதாக தொல்பொருள் ஆய்வாளரான பேராசிரியர் புஸ்பரெட்ணம் தெரிவிக்கின்றார். 13 ஆம் நூற்றாண்டில் தமிழருக்கு சார்பான அரசு ஒன்று இருந்தது – இதன் படைகள் இராணுவ மையம் இருந்த இடங்களில் ஒன்றாக இந்த குருந்தலூர் பகுதியை சிங்கள பாளி இலக்கியங்கள் தெரிவிக்கின்றன’ என பேராசிரியர் குறிப்பிடுகின்றார். ‘11 ஆம் நூற்றாண்டில் பராக்கிரமபாகுவின் பர்மியப் படையெடுப்புக்கு தலைமை தாங்கியதும் ஒரு தமிழன்தான். அவனுடைய தலைமையிலான படை குருந்தூர் பகுதியிலிருந்தே புறப்பட்டது என பேராசிரியர் பரணவிதாரண வரலாற்று நூல் ஒன்றில் தெரிவிக்கின்றார்’ என பேராசிரியர் புஸ்பரெட்ணம் சுட்டிக்காட்டுகின்றார். இதனைவிட தமிழ் மொழியிலான கல்வெட்டுக்கள் பலவும் இங்கு கண்டெடுக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிடுகின்றார்.

ஆக, ஆய்வுகள் என்ற பெயரில் தொல்பொருள் திணைக்களம் வெளிப்படைத்தன்மையில்லாமல் தமக்குத் தேவையான பெறுபேறுகளை உருவாக்குகின்றது என்பது தெளிவாகத் தெரிகின்றது. இதனை எந்தளவுக்குத்தான் தமிழ்த் தரப்பினர் தமது நியாயத்தை வெளிப்படுத்தினாலும் சிங்களத் தரப்பினர் அதனை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. ‘கோட்டா கோ கம’ வில் நடைபெறும் போராட்டத்தில் தமிழர்களும் கலந்துகொள்ள வேண்டும் என அழைப்பு விடுக்கப்படுகின்றது. ஆனால், தமிழர்களின் மீது நிகழ்த்தப்படும் இவ்வாறான ஆக்கிரமிப்புக்கள் அவர்களின் கண்களில் படாத வரையில் தமிழ் மக்கள் அந்தப் போராட்டங்களில் எவ்வாறு இணைந்துகொள்ள முடியும்?

# சிலேட்டு பென்சில்...

## பள்ளிக்கூட பரவசம்!






**கோவில்பாளையத்தில்** அன்று மாரியம்மன் பொங்கல் கோயிலுக்கு அதிகாலை ஐந்து மணிக்கே கூட்டம் கூட ஆரம்பித்தது. பெண்கள் மாவிளக்கு எடுத்துக்கொண்டு அழகான புத்தம் புதுப் புடவை கட்டிக் கொண்டு தலை நிறைய பூக்களைச் சூடிக் கொண்டும் கழுத்து நிறைய நகைகளை போட்டுக்கொண்டும் கையில் தட்டோடு கோவிலுக்குள் சென்று கொண்டிருந்தார்கள். மேளம் அடிப்பவர்கள் மேளத்தை அடித்துக் கொண்டிருக்க வாத்தியக்காரர்கள் வாத்தியத்தை ஊதிக் கொண்டிருக்க திருவிழா களைகட்டியது.

கூட்டம் வர ஆரம்பித்தவுடன் பரபரப்பான தனது வேலையில் இறங்கினான் சேந்தன்.

அங்கொன்றும் இங்கொன்றுமாக குழந்தைகளின் தலை தெரிய ஆரம்பித்தவுடன் சைக்கிளில் மாட்டி வைத்திருந்த மஞ்சள் பையில் இருந்து பலூன்களை எடுத்து ஊத ஆரம்பித்தார் சேந்தேன். ஆறு பலூன்களை ஊதிக் கட்டி வைத்துவிட்டு குழந்தைகளின் வரவிற்காக காத்திருந்தார். 2 குழந்தைகளை அழைத்துக்கொண்டு கையில் தட்டோடு உள்ளே நுழைந்து கொண்டிருந்த பெண்மணியிடம் அந்தக் குழந்தைகள் ‘பலூன் வணும் பலூன் வேணும்’ என்று அழுதன. திரும்பி வரும்போது வாங்கிக்கலாம் என்று கையைப் பிடித்துத் தரதரவென்று இழுத்துக் கொண்டு கோவிலை நோக்கிப் போனார் அந்தப் பெண்மணி.

எப்படியும் காலையில ரெண்டு பலூன் உறுதி என்று அந்த குழந்தைகள் திரும்பி வருவருவார்கள் என்று ஆவலோடு காத்துக் கொண்டிருந்தார் சேந்தன்.

அந்த நேரம் ஒரு பெரிய முட்டையோடு அவன் இருக்கும் இடத்திற்கு அருகில் வந்து ஒரு பெண்மணி அமர்ந்தார்.

‘த்தா என்ன? யார் நீ?’ என்று கேட்டார் சேந்தன். எம்பேரு குமாரிங்க. பக்கத்து ஊர்ல கோயில் திருவிழா முடிஞ்சிடுச்சு இங்க கடை போடலாம்னு வந்தனுங்க. வழி எல்லாம் கடையா இருந்துச்சுங்க இந்த எடம்தான் காலியா இருந்துச்சு அதனால வந்தனுங்க’ என்றார் குமாரி.

இந்த இடம் காலியா ஒன்னு இல்ல ரெண்டு நாளைக்கு முன்னாடியே நான் வந்து இந்த இடத்தை பிடிச்சு வைச்சிருந்தேன்.நான் நிற்கிறது உன் கண்ணுக்கு தெரியலையா?’ என்றார்.

‘ஐயா நீங்க கொஞ்சம் இடத்தில் தான இருக்கிறீங்க. கீழ சும்மா இருக்கற இடத்துல நான் கடை போட்டுக்கறேனுங்க’ என்றார் குமாரி.

ஆளப் பாரு ஆள ரெண்டு நாளைக்கு முன்னாடி இருந்து நான் இடம் பிடிப்பேன். ஆனா நீ ஜம்முனு வந்து இப்ப கடை போட்டுக்குவியாமா! நல்லா இருக்குதே’ என்றார் சேந்தன்.

ஐயா சாப்பிட்டு ஒரு நாள் ஆச்சிங்க. புள்ளைக்கு சாப்பாடு வாங்கிக் குடுக்கக் கூட காசு இல்லைங்க. இன்னைக்கு ஏதோ வேவாரம் நடந்துச்சுன்னா சாப்பிடுவோங்க’ என்றார் குமாரி.

ஒரு நிமிடம் குமாரியையும் அவள் அருகில் இருந்த பெண் குழந்தையையும் பார்த்தார் சேந்தன். ஆறு முழப் புடவை நாலு மூலமாக சுருங்கி ஒரு சொட்டு கூட அழுக்கில்லாத இடமே இல்லை என்ற அளவிற்கு புடவையில் அத்தனை அழுக்கு. எண்ணெய் வைக்காத பரட்டைத் தலை வெத்தலை கரை ஏறிய பற்கள். கழுத்து காது கைகளில் பொட்டு நகை இல்லை. பக்கத்திலிருந்த சுமார் எட்டு வயது மதிக்கத்தக்க பெண் குழந்தையைப் பார்த்தார் கிழிந்த துணியில் ஆங்காங்கே ஒட்டு போட்டு தைக்கப்பட்டிருந்தது. 2 ஜடை பின்னப்பட்டிருந்தது எண்ணெய் பார்த்து பல வருடம் ஆன தலை போலும் செம்பட்டையாக இருந்தன முடிகள். பார்க்கவே பாவமாக இருந்தது சேந்தனுக்கு.

‘சரி சரி போட்டுக்கோ ஆனா உன் கிட்ட பாலூன் எதுவும் இல்லீல்ல’ என்று கேட்டார்.

‘ஐயா பலூன் இல்லைங்க. பந்து கூட என்கிட்ட இல்லைங்க. கார் சீப்பு கண்ணாடி கிலுகிலுப்பை இந்த மாதிரி பொம்மைங்க தானுங்க’ என்றார் குமாரி.

‘சரி சரி போட்டுக்கோ ஆனா போறப்போ ரெண்டு ரூபா கொடுத்துட்டு போயிடு சரியா’ என்றார்.

‘சரிங்க’ என்று வேகவேகமாக கொண்டுவந்திருந்த கிழிந்து போன பிளாஸ்டிக் கவரை எடுத்து விரித்து மூட்டையை அவிழ்த்து அதிலிருந்த பொம்மைகளை எடுத்து அடுக்கி வைத்தார்.



சரிதா. ஜோ

சற்று நேரத்திற்கு முன்பு உள்ளே சென்ற இரண்டு குழந்தைகளும் அம்மாவின் கையைப் பிடித்துக் கொண்டு ‘அம்மா எனக்கு பாலூன் வேணும் பலூன் வேணும்’ என்று கேட்டனர். ‘பலூன் வாங்காமல் விட மாட்டீங்களே என்று கோபத்தோடு பலூன் கடைக்காரரிடம் வந்தார் அந்தப் பெண்மணி. ‘இரண்டு பாலூன் குடுங்க’ என்றார்.

இரண்டு பலூன்களை எடுத்து கொடுத்து விட்டு 10 ரூபாயை வாங்கி மஞ்ச பையில் போட்டுக்கொண்டார் சேந்தன். பலூனை கையில் வைத்துக்கொண்டே ‘அம்மா எங்கே இருக்கிற கிலுகிலுப்பை வாங்கி குடுமா’ என்று கேட்டது ஒரு குழந்தை. ‘இன்னைக்கு பாலூன் நாளைக்கு கிலுகிலுப்பை’ என்றார் அம்மா ‘எனக்கு இப்பவே வேணும்’ என்று அழுதது அந்தக் குழந்தை.

‘அம்மா பத்து ரூபா தானுங்கம்மா வாங்கி கொடுங்க’ என்றார் குமாரி.

‘இப்படியே ஒவ்வொரு கடையிலையும் வாங்கிக் குடுக்க முடிமா நீ உன் வேலையை பாரு’ என்று சொல்லிக்கொண்டே குழந்தைகளை இழுத்துக்கொண்டு சென்று விட்டார்.

ஐசு எல்லாத்தையும் எடுத்து வை நான் போய் அதோ அந்தப் பைப்பில் தண்ணி கொஞ்சம் பிடிச்சுட்டு வறேன்’ என்று வாட்டர் கேனை எடுத்துக்கொண்டு பைப்பை நோக்கிப் போனார் குமாரி.

‘என்னது ஐசா? உன் பெயர் என்ன?’ என்று கேட்டார் சேந்தன்.

‘என் பேரு ஐஸ்வர்யா’ என்றாள் அந்தக் குட்டி பாப்பா. பொருட்களை அடுக்கிக் கொண்டே. கொலுசுச் சத்தம் கேட்டு தலையை உயர்த்தி பார்க்கிறாள்.



அங்கு சிவப்பு நிற பட்டுப் பாவாடையில் ஐஸ்வர்யாவின் வயதை ஒத்த ஒரு சிறுமி நின்று கொண்டிருந்தாள். ‘என்ன வேணும்?’ என்று கேட்டாள் ஐஸ்வர்யா.

‘எனக்கு அந்தக் கார் பொம்மை வேணும் எவ்வளவு?’ என்று கேட்டாள் சிறுமி.

‘அதுவா? அது அம்பது ரூபா’ என்றாள் ஐஸ்வர்யா.

‘இருங்க அம்மாவ கூட்டிகிட்டு வர்றேன்’ என்று அந்தச் சிறுமி திரும்பி ஓட .

அந்தச் சிறுமியின் பட்டுப்பாவாடை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்த ஐசு உடனே தான் போட்டிருந்த சட்டை பாவாடையை தடவிப் பார்க்கிறாள். ஜல் ஜல் என்று ஒலித்துக் கொண்டு ஓடிய கால்களை பார்த்தாள் வெள்ளிக்கொலுசுகள் கலகலவென்று சிரித்தன. அழுக்கேறிய தன் கால்களை தடவிப் பார்த்துக் கொள்கிறாள். காதுகளில் தொங்கிக்கொண்டிருந்த தொங்கட்டான் ஓடும்போது முன்னும் பின்னுமாக அசையதோடே இல்லாத காதுகளை தடவிப் பார்த்துக் கொள்கிறாள். கழுத்தில் முத்துமாலை அங்கும் இங்கும் ஆட மொட்டைக் கழுத்தைத் தொட்டுப் பார்த்துக் கொள்கிறாள். இதைப் பார்த்துக்கொண்டிருந்த சேந்தன் ஒரு நிமிடம் கண்கள் கலங்கி பின்பு சுதாரித்துக் கொண்டு ‘ஏன் ஐசு நீ ஸ்கூலுக்கு போறதில்லையா?’ என்று கேட்டார்.

‘இல்லைங்க ஐயா. தம்பி ஸ்க் கூலுக்கு போறான். உனக்கு எதுக்கு ஸ்க்கூலு அப்படின்னு அம்மா ஸ்க்கூலுக்கு என்ன அனுப்புலீங்க. ஆனா எங்க அப்பனுக்கு நான் படிக்கணும்னு அம்புட்டு பிரியம்’ என்றாள் ஐஸ்வர்யா.

அந்த நேரம் தண்ணீர் பிடித்துக் கொண்டு ஐஸ்வர்யாவின் அருகில் வந்து அமர்ந்தாள் குமாரி.

அதை ஏன் கேக்கறீங்க இரண்டு வருஷத்துக்கு முன்னாடி வராத நோவு வந்து இவங்க அப்பா செத்துப் போச்சு. அதுக்கப்புறம் அவர் பண்ண வேலையே நாங்க ரெண்டு பேரும் பண்ணிக்கிட்டு இருக்கிறோம். பயனும் எங்க அம்மாளும் வூட்டில் இருக்கறாங்க. எப்படியாவது அவனைபா படிக்க வைச்சு பெரிய ஆளாக்கி போட வேணும் அதான் எம்பட ஆசை’ என்றாள் குமாரி.

‘ சரி உங்க வூட்டுக்காரர் பேர் என்ன?’ என்று கேட்டார் சேந்தன்.

‘ஐயா கோவலுங்க’

‘யாரு அந்த ஒல்லியா செவப்பா எந்நேரமும் பீடியக் குடிச்சுட்டு திரிவானே அவனா?’

‘ஆமாங்க அந்தப் பீடி தான் அதுக்கு எமனாப் போச்சுங்க உங்களுக்கு தெரியும்ங்களா?’

‘அட நம்ம சோக்காளி பயந்தான் அல்லா ஊரிலேயும் ஒன்னாத்தானே கடை போடுவோம். செத்து போய்ட்டானா. கேட்கவே கஷ்டமா இருக்குது. நான் கூட ரெம்ப நாளா காணமே உடம்பு கிடம்பு சரியில்லையோன்னு நினைச்சேன்’

‘ஆமாங்க செத்து ரெண்டு வருஷமாச்சுங்க’ என்று கண்களில் வழிந்த கண்ணீரை முந்தானையால் துடைத்தபடி கூறினார் குமாரி.

முதல்ல எம் மவனக் கூட என் யாழரத்துக்கு கூடக் கூட்டிட்டு வருவேன். கோவால் தான் குழந்தைகளைப் படிக்க வைக்க வேணும் அப்படின்னு சொல்லுவான். அதுக்கப்புறம் தானே பள்ளிக்கூடமே சேர்த்தேன்’ என்றார் சேந்தன்.

‘ஆமாங்க ஐசக்கூட படிக்க வைக்க அதுக்கு ஆசை. ஆனா என்ன பண்றது எனக்கு துணைக்கு ஆள் வேணுமே’ என்றார் குமாரி.

‘அதுக்காகப் படிப்பை நிறுத்தக் கூடாது. படிப்பு ரொம்ப முக்கியம். ஆம்பளை புள்ளை பொம்பளப் புள்ள ரண்டயுமே படிக்க வைக்க வேணும். வெளியில வேலைக்கு அனுப்பிச்சா மட்டும் குழந்தைங்க கஷ்டப்படுவாங்க அப்படிங்கறது இல்ல. நம்ம கூட இருந்தா கூட அதுக்குன்னு சில ஆசை இருக்குமே. ஏன் ஐசு உனக்குப் பள்ளிக்கூடம் போகணும்னு இருக்கா? இல்ல உங்க அம்மா கூட இருந்துக்கனும்னு இருக்குதா?’ என்று கேட்டார் சேந்தன்.

அம்மாவின் முகத்தை ஓரக்கண்ணால் பார்த்துக் கொண்டே எனக்கு ஸ்க்கூலுக்கு போகத்தான் நம்ப ஆசை. எனக்கு அந்த சிலேட் பென்சில் ரொம்பப் புடிக்கும். தம்பி ஸ்க்கூல்ல இருந்து வந்த உடனேயும் அது எடுத்து வைத்து நானும் எழுத ஆரம்பித்துவிடுவேன்’ அவள் அதை சொல்லும் போதே கண்கள் விரிந்து முகத்தில் ஏற்பட்ட மலர்ச்சியை பார்த்தார் சேந்தன்.

அடுத்த நாள் திருவிழா முடிந்து பொருட்களை எல்லாம் மூட்டை கட்டி கொண்டிருந்தார் குமாரி சேந்தனும் கிளம்புவதற்குத் தயாரானார். மூட்டையைத் தூக்கி கக்கத்தில் வைத்துக் கொண்டு இருவரும் கிளம்ப ஐசு என்று சேந்தன் அழைத்தார். ஐஸ்வர்யாவின் அருகில் போய் ‘இந்த இந்த பைய புடி’ என்று ஒரு புத்தம் புதிதான மஞ்சள் பையை ஐஸ்வர்யாவிடம் கொடுத்தார்.

பையை பிரித்து பார்த்த ஐஸ்வர்யாவிற்கு கண்கள் மலர்ந்தன. முகத்தில் சிரிப்பு வழிந்தோடியது. குமாரி நாளையிலிருந்து புள்ளைய பள்ளிக்கூட அனுப்புறே என்ன சரியா?’ என்றுகூறிவிட்டு பதிலை எதிர்பார்க்காமல் சைக்கிளை ஏறி மிதிக்க தொடங்கினார். வீட்டிற்கு செல்ல நினைத்தவர் தனது குழந்தை கேட்ட பச்சை கவுன் கண் முன் வர அடுத்த திருவிழாவை நோக்கிச் சென்றது சைக்கிள்.











# அர்ப்பணிப்பின் மறுவுரு




(குகதா)
டக்ஸனா
கிருஷ்ணானந்தன்

மாதங்கள் பத்து
வயிற்றில் சுமக்கவில்லை
அதனாலோ என்னவோ
காலங்கள் முழுவதும்
நெஞ்சினில் சுமக்கின்றார்
அன்பினை மறைத்து
கண்டிப்புகளால் பண்புகளைப்
போதித்து
அரசாய் ஆசானாய்
இறைவனுமாய்
இன்னல்கள் களையும்
உத்தமர் தன்நலம் மறந்து
குடும்பக் கோவிலிற்கு
ஒளியேற்ற தன்னையே
திரியாக்கிடுவார்
தந்தையின் நிழலே இவ்வுலகில்
பாதுகாப்பு அரண்
மகவுகள் யாவர்க்கும்
தத்தி நடக்கையிலும்
தடக்கி விழுகையிலும்
தாங்கிடும் அவர் கையே
வெற்றிகள் கண்டிடவும்
வேங்கையாய்ப் பாய்ந்திடவும்
துணிவுடன் ஊக்கமும்
உரமாய் அளித்திடுவார்
பாசக் கண்களை
வேசக்கண்டிப்புகள்
மறைத்தாலும்
வேசமில்லாப் பாசத்தின்
உறைவிடம் அவர் நெஞ்சே...
பஞ்சத்துடன் போராடி
நெஞ்சம் தளராது
வாழ்விற்கு ஒளியேற்றும்
மாண்புறு
மனிதர் தந்தை











# சிரிக்க... சிந்திக்க...

### கடந்து போக....

